Regd No. TN/TJ/17.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

மா.5. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரசுவதி
மகால் நூல்நிலையம்,
அரண்மனை, தஞ்சாவூர்.1

வர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	60—00
கட்டுரைப்பொழில் (பணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு.ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 58 மலர் : 2

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2015—இரத்தாட்சி வைகாசி
(1984 மே — ஜூன்)

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

LIBRARY OF THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL
THANJAVUR.

தமிழ்ப் பொழில்

துணர் : 58 | உள்ளுறை | மலர் : 2

1. வரவேற்பு வாழ்த்து மடல்
செந்தமிழ்ப் புலவர் தமிழவேள் ... 49
டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் ... 54
மாண்புமிகு கோ. சுவாமிநாதன், பி. பார்ம். ... 56
திரு. டி. கே. சீனிவாசன் ... 57
திரு. சிலம்பொலி சு. செல்லப்பன் ... 58
நாவலர் இரா. நெடுஞ்செழியன் ... 59
மாண்புமிகு எஸ் டி. சோமசுந்தரம் ... 61
டாக்டர் ச. சாம்பசிவனார் ... 62

9. குறிப்பு வினை 65
டாக்டர் ஏ. ஆதித்தன்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. கண்ணன் பாட்டு — கண்ணன் என் காதலி 69
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.
(சென்ற இதழ் தொடர்ச்சி)

11. வரலாறு கண்ட உறையூர் 74
பேராசிரியர் சி. கோவிந்தராசனார்

12. தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி 82
புலியூர்க் கேசிகன்.

13. கல்வெட்டியல் அறிஞர்கள் 85
புலவர் பொன். முனியப்பன், எம். ஏ.

14. நவில்தொறும் நூல் நயம் 95
அமுத. இளவழகன், பி. லிட், பி. எட்.

——— ※ ※ ※ ———

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 58	திருவள்ளுவர் யாண்டு — 2015 இரத்தாட்சி — வைகாசி மே — ஜூன் 1984	மலர் 2

செந்தமிழ்ப் புரவலர் - தமிழவேள்

மொழி வாழ்த்து

பூமணக்கப் புகழ்மணக்கப் பொற்புடைய கலைமணக்கப்
பாமணக்கப் பதிமணக்கப் பகுத்தறிவு மலர்மணக்கத்
தேன்மணக்கக் கனிமனக்கத் தெவிட்டாத பயன்மணக்க
ஊன்மணக்க உயிர்மணக்க உயர்தமிழே ! வாழியவே ... !

அவைக்கு வணக்கம்

1\. பாட்டுக்கு வமைமன்னன் ; புரட்சி செய்யும்
பாவேந்தர் தமக்கோநல் கண்ணன் ! பாங்காய்க்
காட்டும்நல் லுணர்வாலே காஞ்சித் தம்பி !
கடமையாற்றத் துணிவதில் ஈரோட்டுத் தும்பி !

நாட்டுநிலை வாட்டுவதை நீக்க ஓம்பி,
நற்றமிழால் தேன்மழையைத் தந்த நம்பி !
சூட்டுகின்ற புகழ்மாலை உயர்வாய் எம்பிச்
சுறுசுறுப்பாய் இயங்கநல்ல தங்கக் கம்பி !

2. புத்தாகப் பழந்தமிழ்க்கோர் பொலிவு காணப்
புத்துயிரும் புதுமணமும் புதுக்கி ஞானச்
சொத்தாக நாவலரின் தமிழ வேளின்
சரித்திரத்தைத் திருப்புகின்ற கவிஞரேறே !
எத்திக்கும் சுவைபயக்க இசைக்கும் கானம்
இயைவதற்குப் பாடுகின்ற பாவலர்காள் !
தித்திக்கும் பாட்டரங்கில் சுவையை மாந்தத்,
திரண்டிருக்கும் தெள்ளியரே ! என்வணக்கம் !

3. **தமிழவேள் உருவம்**
நிழற்படத்தில்
தமிழவேளின் சிலைதன்னைக் காண்போர்க் கெல்லாம்
தமிழ்காக்கும் தலைமகனாய் ஆவ தற்கும்
அமிழ்தாகும் ஊற்றுணர்வைத் தோற்று வித்தே
அகிலத்தில் தமிழன்தான் முதன்மை என்னும்
கமழ்கின்ற கொள்கைதனைக் கட்டிக் காக்க,
கருத்துவளம் நிறைவதற்கே செய்யு மன்றோ !
தமிழ்த்தாயும் தான்பெற்ற புதல்வன் பேற்றைத்
தனைநினைந்து மகிழ்வதற்கும் எல்லை யுண்டோ !

4. ஆல்போலத் தழைத்திடவும் ஆக்கம் பெற்று,
அருகுபோல் வேரூன்றும் அறிவைக் கொண்டு
பால்போலும் உள்ளங்கொள் நாட்டரர் ஐயா,
பண்புகமழ் கவியரசர் முதலாய் ஓங்கும்
சால்புதோயும் சான்றோர்கள் துணையை மேவிச்
சீருலவும் தமிழ்நூல்கள் கண்ட வள்ளல் :
கால்கோளும் பல்கலைக்கும் ஆய்வு செய்யக்
காவிரிமுதல் கங்கைவரை சென்று கண்டார்.

5. தமிழாய்ந்த தமிழ்ச்சான்றோர் தமையே போற்றித்
தமிழமுதின் சுவையுணர்ந்து தமிழைப் பேணி
தமிழவேளாய் முதன்முதலில் பட்டம் பெற்றுத்
தனித்தமிழும் வளர்வதற்குச் சங்கம் கண்டார்
தமிழகத்துக் ''கரந்தைநடை'' எனவும் போற்ற
தனித்ததொரு தன்மைவாய்ந்த இயக்கத் தாலே

அமிழ்தொக்கும் சுவைகூட்டிச் சிறப்பாய் ஓங்க
அருந்தமிழ்த்தாய் தமிழகத்தில் பவனி வந்தாள்

6. தமிழ்நாட்டில் தமிழுக்கோ இடமே இல்லை,
தமிழர்க்கும் நல்வாழ்வு தானும் இல்லை
இமியேனும் கருத்துண்டா ? என்ற போதே
இடர்நீக்க சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வன்
தமிழராக வந்தபோது தமிழ வேளும்
தகவுடைய நற்செயலை இணைந்து செய்ய
அமிழ்தொக்கும் தமிழுக்கும் திருவை யாற்றின்
அரசர்கல் லூரிதன்னில் ஏற்றம் கண்டார்

செந்தமிழ்ப்புரவலர் 1983. ஞானியார் மணிவிழா-திருப்பாதிரிப்புலியூர்

7. செந்தண்மை செந்தமிழைப் புரப்ப தற்கே
செழுமைநிறை தமிழ்ச்சங்கம் தோற்று வித்து
முந்தைபுகழ் வந்துசேர மொய்ம்பின் மிக்கு
முத்தமிழை வளர்த்திட்ட தமிழ வேட்குப்
பந்தமுடன் பண்புடைமை பொலிந்து காணப்
பாரிலுள்ளோர் யாவருமே பணிவாய் ஏற்கச்
செந்தமிழின் புரவலராம் பட்டம் சூட்டிச்
செழுங்கருணை புரிந்துநின்றார் ஞானி யார்தாம்

''தமிழவேள்'' 1938 தமிழ்ச்சங்கம்

8. முத்தமிழை மூவேந்தர் கொடையுந் தந்து,
முச்சங்கம் வளர்த்திட்ட முறைமை போல
எத்திக்கும் புகழ்மேவும் உமாம கேசர்
ஏற்றமிகு தமிழ்க் கோயில் எழிலாய்க் காத்துப்
புத்தொளிரும் புலமைக்கே பொருளும் ஈந்து
புரந்திட்ட வண்மையினால் தமிழ வேளாம்
உத்தியொடு தமிழாய்ந்த தமிழ்ச்சான் றோர்கள்
உறுபட்டம் வழங்கியுமே உவந்தார் நாளும்.

9. தமிழன்னை தவமிருந்தே ஈன்ற பிள்ளை
தகவுடைய ஆன்றோர்தாம் புகழும் பிள்ளை
அமிழ்தொக்கும் தொழிதன்னை வளர்க்கும் வேளை
அயல்மொழிதான் ஆதிக்கம் செலுத்த வந்தால்
குமுறுகின்ற எரிமலைதான் வந்த தொக்கும்
கொந்தளித்து முழங்குகின்ற கடலே ஒக்கும்

இமைப்பொழுதும் மறவாதே பரணி பாடும்
எம்தோன்றல் தமிழவேளின் ஏற்றங் காண்பீர்.

10. இந்தி எதிர்ப்பு : 1937

செந்தமிழ்க்கு ''லம்பாடி இந்தி'' என்னும்
செந்தேளின் நஞ்செதற்கோ" என்று சீறிச்
செந்தேன் நிகர்த்தமொழி வாழ்வதற்கே
சிந்தையொளிர் செம்மலவர் நெஞ்சில் துன்பம்
வந்தபோதும் தொண்டுசெய்ய முந்தும் எண்ணம்,
வளர்தமிழே கோலோச்சக் கண்ட வண்ணம்
அந்திபகல் என்னாதே அயரா நிற்பார்
அவரிடத்தில் மற்றவர்கள் ஆற்றல் கற்பார்

11. வட்டக்கழகப்பொறுப்பு – மொழி

எந்நாளும் மொழிதன்னை வளர்ப்ப தற்கே
ஏற்றமிகு சிந்தனையைத் தெளிவாய்த் தந்தும்
பொன்னாடாய்த் தமிழகந்தான் வாழ்வ தற்குப்
பொறுப்புமிகு பதவியுந்தாம் வகித்த போதும்
தன்னலமே இல்லாத தொண்டு செய்து
தாழ்வுரைகள் என்றுமேதாம் பேசா நின்று
மன்னுபுகழ் கொண்டவரே' தமிழ வேளே:
மாண்பினைத்தான் அளவிடற்கும் எல்லை உண்டோ?

12. குற்றாலத் தைந்தருவி போலக் கொள்கைக்
குரைமேவும் தாய்மொழியை வளர்க்கும் போது
கற்றவர்க்குத் தமிழவேள்தான் கரும்பாய்த் தோன்றிக்
கற்கண்டும் கனிச்சாறும் போல நிற்கும்
பொற்புடைய அவர்செய்கை கண்ட சான்றோர்
புளகாங்கம் அடைந்திட்டே துணையாய் மேவ,
பற்றற்ற முனிவருமே நட்பு கொள்ளப்
பாரினிலே இவர்போல ஒளிர்ந்தார் யாரே?

13. பண்பு

விலைபேசித் தமிழினையே விற்ற தில்லை
வீணருக்குத் துணையாக வீழ்ந்ததில்லை,
அலைபாயும் கடலைப் போல் ஓய்வே இல்லை
அருந்தமிழ்க்குத் தொண்டுசெய்ய அலுப்பே இல்லை
கலைமேவும் நிலைபோற்றி வாழும் எல்லை
கனிவாகும் பண்புக்கோர் கரையே இல்லை,

மலைவுதானும் அவர்வாழ்வில் கண்ட தில்லை
மலர்முகமே மனமகிழ்வாய்க் கொண்ட தெல்லை.

14. நாடுமொழி மக்களினம் நலங்காண் கொள்கை
நலிவுற்றே திசைதிரும்பும் நாழிகையில்
பீடுபெற உளந்துடித்தே உணர்வைப் பாய்ச்சிப்
பாடுபட நின்றவர்க்கே துணையாய் நின்று
கூடுவிட்டுக் கூடுபாயும் குணக்கே டாளர்
குவியலாகக் கூடுவதை நீக்கி நாளும்
பாடுபடும் பக்குவத்தால் தமிழ வேள்தான்
பைந்தமிழின் பொலிவுதனைக் கண்டார் எங்கும்

15. வடபுலத்துப் பல்கலைக்கழக ஆய்வு

செந்தழல்தான் உன்னுடலை எரித்த போதும்
செந்தமிழாம் உன்னுயிரை எரித்த துண்டோ ?
முந்தையோர்தம் மொழித்திறனை உலகில் காட்ட
முனைத்திட்டாய்ப் பல்கலைக்க ழகந்தான் காண
எந்தெந்தத் துறைதனிலே ஏற்றம் வேண்டும்
எனவாய வடபுலத்துக் கழகம் போங்கால்
வந்தகாலன் கால்பற்ற மயங்கா நின்று
வளர்தமிழே என்னுயிராம் என்று சொன்னாய் ... !

16. செந்தமிழைப் புரப்பதற்கே அறிஞர் தம்மைச்
சீர்தூக்கி அரவணைத்த செம்மல் ! நீவிர்
செந்தன்மை செம்மொழியும் புரந்த தாலே
செந்தமிழில் புரவலராய் தமிழ வேளாய் !
எந்தநாளும் விளங்குதற்கே ஏற்றங் கொண்டாய்
இணையில்லாத் தமிழோடு கலந்து விட்டாய்
இந்த நிலை யாருணரார் ! அம்ம ! அம்ம ! ! !
இருந்தமிழே உன்னாலே இருந்த தையா !.

17. நாவலர் தமிழவேள் நட்பு

தமிழுக்கு இருகண்கள் தமிழ வேளும்,
தகவுடைய நாவலராம் ந. மு. வேயும்
அமிழ்தாகும் உணர்வுதமைத் தமிழுக் காக்கி,
அனல்தனக்கும் அழியுமுடல் தம்மை ஈந்து
கமழ்கின்ற புகழ்கொண்ட கொண்ட லாகக்
கருத்துவளம் தழைப்பதற்கே கருவு மாகித்
தமிழோடு கலந்துவிட்ட தமிழ்ச்சான்றோர்கள்
தமை வணங்கி நெறி காப்போம் நாளும் நாமே,

நன்றி

18. மனந்தூய்மை மலர்கின்ற மதிநூல் கற்று,
மலர்வாழ்வு பெறுவதற்கும் மொழியின் தொண்டால்
இனந்தூய்மை கொண்டுவாழும் இனியோர் தம்மை
இனங்கண்டு அவர்தமக்கே பொறுப்பைத் தந்து,
தினந்தூய்மை தமிழ்மொழிக்கு வாய்ப்ப தற்கே
திகழ்ந்திட்டுக் கண்ணிமைபோல் காத்து நின்று,
தனந்தூய்மை அடைவதற்கும் தகுதி ஈந்து,
தந்நாட்டின் பெருமையையே உயிராய்க் காக்கும் ... !
தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் சான்றோய் வாழி !
தமிழ்ச்சங்கப் பெருமன்றச் சான்றோய் வாழி !
வணக்கம் ... ! நன்றி ... !

தமிழ் வாழ்க !

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு

விழாவின்கண் தலைமையேற்றருளும்

முத்தமிழ்க் காவலர்

டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கு

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் உவந்துரைக்கும்

வரவேற்பியல் வாழ்த்துரை

செஞ்சடைவா னவன்திருமால் சேயோன் மற்றும்
தேவரொடு வான்புலவோர் செறிந்து கூடி
மஞ்சுலவு நான்மாடக் கூடலின் கண்
மாறனது பேரரசில் வளர்க்கப் பெற்ற
எஞ்சலிலாக் கலைவளமும் எழிலும் சான்ற
இயலிசை நாடகமென்னும் மும்முகத்தான்
விஞ்சையெலாம் நல்கிடும்மேன் மொழியாம் தேவர்
விரும்பிசெவி மடுத்த தமிழ் மொழியை மீண்டும்
தென்னகத்தில் அரசோச்சச் செய்தற் காகச்
சிந்தை உரை செயலாற்றொண் டாற்ற வேண்டிக்
கன்னிஎனும் தமிழ்த்தாய்க்குக் கரந்தையின் கண்
கலைக்கோயில் அமைத்துவழி பாடியற்றித்

தொன்னலத்தை மீட்டு, தமிழ்ப்புலவோர் கல்வித்
துறைதோறும் செம்மாக்கத் தமிழ்மாண் போங்கத்
தன்னலத்தைத் துறந்த தமிழண்ணல் சீர்த்தி
தழைதமிழ வேள்உமாமகேசனார் தம்
உவகைதரும் நூற்றாண்டு விழாச் சிறக்க
ஒளிர்தலைமை பூண்டொளிர்வோய் ! புலவோர்க்கீங்கே
அவையமைத்துப் பாண்டியன்போல் திகழும் செம்மால் !
அறிவாற்றல் தமைத்தமிழ்க்கே ஆக்கி இந்தப்
புவிபுகழ முத்தமிழ்க்கா வலராய் ஓங்கும்
பூட்கை மிகு **கி. ஆ. பெ. விசுவநாத !**
தவமகவாய்த் தமிழ்த் தொண்டிற்கமைந்த தக்கோய் !
தமிழ்ச் சங்கம் பேணுபெருந்தலைவ ! வாழி !
பைந்தமிழ்த் தாய் மாண்புயர்த்தப் பல்லாற்றானும்
பகுத்தறிந்து தொண்டாற்றும் பான்மைசான்றோய் !
நைந்ததமிழ் நாடுயர நாணு ளும் நீ
நயன்மையொடு தருதிட்டம் நவிலும் சொற்கள்
மைந்துநிறை எழுத்திவற்றின் மதிப்பை எண்ணி
மனமுவந்து போற்றுகிறோம், வஞ்சிப்போரின்
சிந்தையெலாம் நடுநடுங்கச்செய்யும் வீர !
திருச்சியில் மற்றொரு கோட்டை எனத்திகழ்வோய் !
ஒண்டமிழ்த்தொண்டுயிர்ப்பெனவாழ் மூதறிஞ !
உயர்தமிழ வேளுளத்தை உணர்ந்த நல்லோய் !
பண்டமைந்த புகழ்தமிழநா டெய்த நாளும்
பாடுபடும் இளையோய் பல்லாண்டுவாழ்க !
மண்டுபுகழ்க் கரந்தையிலெம் சங்கத்தொண்டு
வளரநறுந் துணைபுரியும் மாண்பு மிக்கோய் !
எண்டிசையும் புகழ்ந்தேத்த இன்னும் நூறாண்டு
இருந்தமிழ்த்தாய்ப் பேரருளால் இனிதே வாழி !

தஞ்சாவூர்–2
21 4 –1984

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

தமிழ் வாழ்க

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு
விழாவின் கண்

தொடக்கவுரையாற்றிச் சிறப்பிக்கும்
தமிழகச் சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்
மாண்புமிகு கோ. சுவாமிநாதன், பி. பார்ம்.,
அவர்கட்குக்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வழங்கிய

வரவேற்பு வாழ்த்து மடல்

மன்னியசீர்சால் மூவேந்தர்
மடியில்வளர்ந்து வான்புலவோர்
பன்னியுளத்தாற் பாராட்டப்
பன்னூல்பயந்த முத்தமிழாம்
கன்னியரியா சனந்தவிர்ந்து
கலங்கியுழன்ற பொழுதின்கண்
பொன்னிவளத்தால் புவிபுரக்கும்
புகழ்சால் தஞ்சை மருங்குவளர்

கரந்தையின் கண் தமிழ்ச்சங்கக்
காவல்பூண்டு முத்தமிழின்
அரந்தைநீங்கத் தொண்டேற்றிங்கு
அயராதுழைத்துத் தமிழ்மொழியைப்
புரந்தசெம்மல் புகழ் தமிழ
வேளாம் உமாமகேசுவரனார்
நிரந்தசீர்சேர் நூற்றாண்டு
நிகரில்விழாவைத் தொடங்கியுரை

மகிழச்செய்யும் மாண்புடையோய் !
மருந்துபொருந்த விளைத்துநலம்
மிகுக்கும்வணிக ! சட்டமன்ற
மேலவைக்கோர் துணைத்தலைவ !
புகழ்கூர்வண்மைக் குணத்தாலே
பொலியும்சுவாமி நாதனெனத்
திகழும்செம்மால் தமிழ்த்தொண்டால்
சிறக்கும்திறலோய் வருக ! தமிழ்

நாடும்மொழியும் நலங்கூர
நாளும்பணிசெய் துவப்புறுவோய் !

நீடும்புகழால் தமிழர் தலை
நிமிரும்பணியே நிகழ்த்திவளர்
பீடும்வளமும் மேன்மேலும்
பெருகிப்பண்பால் உயர்ந்துபுகழ்
கூடும்படிநீ பல்லாண்டு
குறிக்கோள்சிறக்க வாழியவே!
ஆன்றகலைகள் வளர் தஞ்சை
அளித்தபுகழ்மா மணியேசீர்
சான்றகரந்தைத் தமிழ்ச்சங்கம்
தழைக்கத்துணையாச் சார்ந்துதமிழ்
மூன்றும்வளர்க்க வேண்டுகிறோம்
மூவாத்தமிழ் போல் என்றென்றும்
ஊன்றிப்பொலிந்து நலமோங்கி
ஊழிபலநீ வாழியவே!

தஞ்சாவூர், }
21—4—84. } இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

தமிழ் வாழ்க

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழாவின்கண்

நூற்றாண்டு விழாச் சிறப்பு மலரை வெளியிட்டருளும்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர்
தத்துவமேதை
திரு. டி. கே. சீனிவாசன் அவர்கட்குக்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அளிக்கும்

வரவேற்பு வாழ்த்து மடல்

எழில்வளர் இனிமை தூய்மை இலக்கண வரம்பு மூத்த
மொழிகளுள் முதன்மை சான்ற முத்தமிழ், கலைம லிந்த
அழகொளிர் வடிவும் ஆக்க அறிவியற் கொத்த பாங்கும்
முழுமைபெற் றிலங்கும் சீர்சால் மொழி,முடி வேந்தர் மூவர்

புலமைசால் அறிவர் போற்றப் புகழ்மலிந் துயர்ந்து நின்ற
நலமெலாம், அடிமை வேட்டு நலிந்ததம் மக்க ளாலே

மெலிந்தயர் வுற்ற காலை விடியலின் சுடரைப் போல
வலமிகு தொண்டால் நாட்டு வளத்தினை வளர்க்க வந்த

காவலன், மொழிவ ளர்க்கக் கரந்தைநற் றமிழ்ச்சங் கத்தின்
தாவிலாத் தலைமை ஏற்ற தமிழவேள் உமாம கேசன்
மேவுசீர் கமழ்நூற் றாண்டு விழாமலர் வெளியீ டாம்நற்
சேவையைப் புரியப் போந்த திருமிகுசீனி வாச!

தத்துவ மேதை யென்று தமிழகம் போற்ற நாளும்
வித்தகப் பணிசெய் தோங்கும் வீறுசால் அறிஞ! சங்க
முத்தமிழ் வளர்க்குந் தொண்டால் முகிழ்த்தஇத் தமிழ்ச்சங் கத்திற்கு
ஒத்தது புரிந்து நாளும் உதவுக தமிழ வேளின்
நினைவெலாம் செயலாய் ஓங்கி நிலைபெற வழங்கு வோர்பால்
கனிவுறப் பேசிக் கன்னித் தமிழ்தலை நிமிரச் செய்து
முனைவளந் தமிழ்நா டெய்தி மொய்ம்பொடு தமிழர் வாழ
நனிபுரிந் துயர்ந்து சீர்த்த நலமெலாம் கமழ வாழ்க!

தஞ்சாவூர்-2
21-4-1984

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

தமிழ் வாழ்க

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழாவின்கண் தமிழவேள் நினைவுக் "கட்டுரைப் பூங்கா" நூலை வெளியிட்டருளும்

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்

திரு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கட்குக்
கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் அளிக்கும்

வரவேற்பு வாழ்த்திதழ்

இயலிசை நாட கத்தால் எழிலுறக் கிளைத்துச் சங்கம்
பயில்வுறத் தொகையும் பாட்டும் பழகுநல் லறநூல் ஆக்கச்
செயலிலக் கண நூல் தேனார் தீஞ்சுவைக் காப்பியங்கள்
மயல் தவிர் அருள் நூல் தந்து மாமன்னர் பேண வாழ்ந்த

அருந்தமிழ் அன்னை, மக்கள் அயர்வினால் நிலைமை மாறி
வருந்துறு காலை வாழ்வு வழங்கிடத் தோன்றி வந்த
பெருந்திறல், சீர்க ரந்தைத் தமிழ்ச் சங்கம் பீடுற் றோங்க
மருந்தெனத் திகழ்ந்த மைந்தன் தமிழவேள் உமாமகேசன்

மிகுபுகழ் வளர்நூற் றாண்டு விழாத்தனி வீறு கொள்ள
மகிழ்துணை புரிந்து கற்றோர் வரைந்த **கட்டுரைப்பூங் காச்சீர்**
திகழ்தர வெளிப்ப டுத்தும் **சிலம்பொலி செல்லப்பப்பேர்.**
தகவுறப் பெற்ற சால்போய் ! தண்டமிழ்த் தாயின் சேயே !

சுடர்மிகு தமிழ்வ ளர்ச்சித் துறை இயக் குநராய்ச் சீர்த்த
கடமைசெய் துவக்கும் செம்மால்! கனி தமிழ் துறைகள்தோறும்
இடம்பெற எண்ணி எண்ணி இணையிலாப் பணிசெய்தோங்கும்
நெடும்புக ழாள! பண்பால் நிறைந்தொளிர் அன்ப வாழி!
ஈடிலாத் தொண்டால் ஓங்கும் இருபெருந் தகையா ளர்சீர்
நாடெலாம் தெரிய நூற்றாண் டுயர்விழா நடத்தி எங்கள்
பாடெலாம் நினதாக் கொண்ட பைந்தமிழ் அறிஞ ! நாளும்
பீடமை புகழும் பேறும் பெருகிப் பல் லாண்டு வாழ்க !

தஞ்சாவூர்-2
21—4—1984

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ் சங்கத்தார்.

தமிழ் வாழ்க

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழாவின் கண் முன்னமர்ந்து வாழ்த்தி நிறைவுரை நல்கும்

தமிழக அரசு நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர்,

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

அவர்களுக்குக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் உவந்தளிக்கும்

வரவேற்பு வாழ்த்து மடல்

நானில மொழியுள் முன்னே
  நலம் பெறப் பிறந்து மும்மைக்
கோனிலை தாங்கிச் சீர்சால்
  கூடலில் வளர்ந்து நூலால்
மேனிலை யுற்றிங் கெண்ணெண்
  விஞ்சையும் நிறைந்து சிந்தை
தேனுற நிகழும் சீர்சால்
  தெய்வமாத் தமிழை வேந்தர்

மூவரின் பின்னர் ஆட்சி
மொய்ம்புடன் ஏந்துதற்குக்
காவலனாகித் தஞ்சைக்
கரந்தையிற் சங்கம் பேணி
மேவலர் வியக்கத் தொண்டு
வேந்தெனப் புரிந்த செம்மல்
தாவிலாத் தமிழவேள்,
உமாமகே சப்பே ராளன்

வியன்புகழ் கமழ் நூற் றாண்டு
விழாச் சிறப் போங்கத், தேனின்
பெயலெனச் சான்றோர் மாண்பைப்
பேசுதற் கெழுந்த செம்மால் !
அயர்விலாத் தமிழ்த்தொண் டோடிங்
கரசியற் பணியுந் தாங்கி
நயமிகப் புரியும் செஞ்சொல்
நாவல ! நிதியமைச்சே!

தென்னவர் கோவாய் எம்முன்
திகழ் நெடுஞ் செழிய வாழ்க !
மன்னுபே ரறிஞர் அண்ணா
வழி நிலைத் தமிழ்த் தொண்
டாற்றும்
நன்னயம் சான்றோய்! நாடு
நலம்பெற இலங்கும் அண்ணால் !
கன்னலும் கைக்கப் பேசும்
கலை வலாய் ! வருக ! வாழி !

தமிழவேள் உள்ளம் போலத்
தழைக்குமெம் சங்கத் தொண்டு
இமிழ் கடல் சூழ்வளாகம்
எங்கணும் பரவ நாளும்
நுமதருந் துணையை நாளும்
நோக்குதும் ஆக்கம் நல்கி
அமிழ்துறழ் தமிழ்போல் ஈங்கே
ஆண்டுபல் லாண்டுவாழி!

தஞ்சாவூர்-2, } இங்ஙனம்,
22–4–1984. } **கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்**

தமிழ் வாழ்க

தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு

நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்

நூற்றாண்டு

விழா நிறைவுரை அரங்கத் தலைமை ஏற்றருளும்

தமிழக அரசு வருவாய்த்துறை அமைச்சர்

மாண்புமிகு எஸ். டி. சோமசுந்தரம், பி. ஏ,

அவர்கட்குக்

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் உவந்தளித்த

வாழ்த்தியல் இன்னுரை மடல்

உலகெலாம் வழங்கும் உரைவளர் மொழியுள்
உயர்தனிச் செம்மொழி என்றே
புலமெலாம் அறிந்த மொழிவலார் புகழும்
புரையிலாக் கலைவளஞ் சான்ற
வலமுலாந் தமிழ்த்தாய் வளனெலாம் கருதா
வஞ்சரின் விஞ்சிய செயலால்
நலமெலாங் குன்றி நடைப்பவர் தம்மை
நாடியுள் வாடிய காலை
முன்னைமூ வேந்தர் தம்மையே புரைய
முதுபுகழ்த் தஞ்சையம் பதியில்
அன்னைநெஞ் சுவப்ப அறிவனாய்த் தோன்றி
அருள்கரந் தைத்தமிழ்ச் சங்கம்
முன்னிமுத் தமிழும் முறை முறை ஓங்க
முயன்றுநற் றொண்டினால் வளர்த்த
தன்னிக ரில்லாத் தலைவனாம் தகைசால்
தமிழவே ளுமாமகே சுரனார்

ஓங்குநூற் றாண்டு விழாவொடு, தானே
உளங்கொளப் பயின்றுமுத் தமிழும்
பாங்குறத் தேர்ந்து பைந்தமிழ்ச் சிறப்பைப்
பாரெலாம் பரப்பிய சீரோன்
நாங்களும் நாடும் நயந்துமிக் கேத்தும்
நாவலர் பண்டித ந. மு.
வேங்கடசாமிப் பெருந்தகை யார்நூற்
றாண்டு விழாநிறை யரங்கில்

தாய்மைசேர் அன்பால் தலைமையேற் றருளும்
தமிழ்நலம் சான்றபே ரண்ணால் !
வாய்மையாற் சிறக்கும் தமிழக அரசின்
வளர்வரு வாய்த்துறை யமைச்சே !
தூய்மைசேர் சோம சுந்தரம் என்னும்
தோன்றலே ! வாழியர் நெடிதே !
ஆய்நலம் ஓங்க வளனெலாம் நிறைய
ஆண்டுபல் லாண்டுகள் வாழி !

அரும்பெருங் குணனும் ஆற்றலும் அறிவும்
அமைந்தநல் லண்ணலே நம்மோர்
இருபெருந் தகையார் ஏற்றநற் பணிகள்
இனிதுயர்ந் தோங்கிடத் துணையாய்
ஒருங்கமைந் திசைகூர் செந்தமிழ் தழைக்க
ஊக்கமும் ஆக்கமும் அருளி
நிரம்பிய புகழால் நேர்ந்துளம் மகிழ்ந்து
நெடிதுபல் லூழிகள் வாழி !

தஞ்சாவூர் – 2,
22—4—1984.

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.

21—4—1984இல், தமிழக அரசு நடாத்திய "தமிழவேள் உமாமகேசுவரனார் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் நூற்றாண்டு விழாவின்போது, கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் அளித்த பாராட்டின்போது

டாக்டர் ச. சாம்பசிவனார்
பாடிய நன்றிப் பாமாலை

"தமிழ்வளர்த்த மதுரையிலே தமிழ்தான் இல்லை!
தமிழர்க்குத் தாய்மொழியில் உணர்வே இல்லை!
தமிழ்மக்கள் நாங்களுமே என்று சொல்லித்
தலைநிமிர்ந்து நடப்பதற்குவழியு முண்டோ?
தமிழர்க்குத் தாய்மொழியில் கல்விக் கூடம்
தக்கபடி இருந்திட்டால் மேன்மை உண்டு!
தமிழ்வாழத் தான்வாழ எண்ணி னரே!
தமிழ்ப் பாண்டித் துரைத்தேவர் செம்மல் அன்றோ?" 1

''மன்னவராம் துரைத்தேவர் வழியில் வந்தார்!
மாண்புயர்ந்த செந்தமிழின் சீர்மை கண்டார்!
பின்னைமொழி உலகினிலே பிறக்கக் கண்டார்!
பேரறியாப் பலமொழியும் துலங்கக் கண்டார்!
அன்னைமொழி உலகமெலாம் ஆள வேண்டும்
அதுவரைக்கும் உறங்காமல் உழைக்க வேண்டும்!
என்றநிலை எண்ணித்தான் உமாம கேசன்
எழிற்சங்கக் கல்லூரி காத்து நின்றார்! 2

''காலையிலே சட்டங்கள் ஆய்ந்து பார்ப்பார்!
கவின்மணக்கும் தமிழ்த்தாயை வணங்கிநிற்பார்!
மாலையிலே மன்றமுதைப் பருகி நிற்பார்!
மற்றவர்கள் வருமுன்னே வந்து நிற்பார்!
ஆலமர நீழலிலே இருக்கை கொள்வார்!
அருந்தும்பி போலாக அலுவல் காண்பார்!
வேளைவரும் நன்னாளை வேண்டி நிற்பார்!
விரும்பிடுநற் பொருளெல்லாம் ஈத்து வப்பார்! 3

''ஐயாறன் அப்பனிடம் அன்பு கொள்வார்!
அவன்கோலம் காண்பதிலே ஆசை கொள்வார்!
மெய்யாகச் சிவன்பாலே சிந்தை வைப்பார்!
மேலான தமிழ்மொழியை அவன்பால்சேர்ப்பார்!
பொய்யாக எதையேனும் புனைய மாட்டார்!
போர்மறவர் தோற்றத்துப் பொலிவே கொள்வார்!
கைகண்ட மருந்தாகத் தமிழைக் கொள்வார்!
கற்றவர்கள் போற்றிடுவார் கவலை கொள்ளார்!" 4

''நகரத்துத் தெருவினிலே நடந்து செல்லும்
நற்றமிழின் புலவரைத்தான் கண்டு விட்டால்
நகருந்து வண்டியினை நிறுத்தச் சொல்லி
நல்லுரைகள் பலபுகன்று அருகி ருத்தி
அகமனைக்கு அவர்செல்லும் இடத்தே விட்டு
அன்பாகத் திரும்புகின்ற தமிழ வேள்தாம்
முகமலர்ந்து முல்லைக்குத் தேரைத் தந்த
மொய்த்த புகழ்ப் பாரிக்கு ஒப்பு ஆவார் அன்றோ!'' 5

''சங்கத்தை வளர்த்திட்டார் தமிழ வேளே!
சான்றோ ராய்த் திகழ்ந்திட்டார் இயல்பி னாலே!
மங்காத தமிழைத்தான் காக்க வேண்டி
மன்றத்தே நடமாடும் அரசை வேண்டி
அங்கமெலாம் கரைந்துருக உமாம கேசன்
அப்பரைப்போல் உழைத்திட்டார் என்ப துண்மை!

பொங்கிடுநற் சரயுநதிக் கரையோ ரத்தே
பூதவுடல் நீத்திட்டுப் புகழைப் பெற்றார்.'' 6

"தமிழ்வாழத் தம்கையாற் கவரி வீசித்
தக்கபுகழ் பெற்றிட்டான் ஒருசே ரன்தான்!
தமிழ்வாழப் புலவர்க்கு மலையும் குன்றும்
தக்கபடி அளித்ததெலாம் உண்மை உண்மை!
தமிழ்பாடும் கபிலர்க்கு நண்பன் பாரி,
தன்புகழுக் காகத்தான் உயிரை விட்டான்!
தமிழ்வாழத் தன்னுயிரை ஈத்தான் என்ருல்
தண்டமிழ வேளுக்கு ஈடுண் டாமோ?" 7

"புரட்சியின் வடிவ மானுர்!
பொன்மனச் செம்மல் ஆனுர்
அறத்தையே செய்கின் ருரால்!
அருந்தமிழ் காக்கின் ருரால்!
சிரத்தையாய் எம்ம னேர்க்கும்
சிறப்பினைச் செய்கின் ருரால்!
கரங்களால் வணங்கு கின்ருேம்
கனிதமிழ்ப் பாவால் போற்றி!'' 8

"கனல்பறக்கும் பொறிபறக்கும் கனிதமிழின் சுவை மணக்கும்!
அனல்காற்றும் அஞ்சிநிற்கும்! அரியேறும் ஒதுங்கிநிற்கும்!
கூனலுள்ள பெரியோரின் கூன்நிமிர்ந்து கூத்தாடும்!
மானமுள்ள மறத்தமிழர் மாண்பான காளிமுத்து!'' 9

''முத்தமிழின் காவலராய் முன்னிற்பார் ஒருவ ருண்டு!
இத்தரையில் இவர்க்கிணையாய் இன்னெருவர்இல்லையன்ருே
சத்தான தமிழ்ப்பேச்சு; சார்ந்தோரைத் தன்பால்ஈர்க்கும்
முத்தான செயல்வீரர் முதற்சான்ருேர் விசுவ நாதம்!" 10

"சங்கத்தைக் காத்துநிற்கும் தலைவர் தம்முள்
சான்ருேராய்த் திகழ்ந்திடுவார் சிலபே ருண்டு!
பங்கமில்லாப் பண்பாளர் இராம நாதன்
பாராட்டுச் செய்கின்ருர் பாரோர் மெச்ச!
தங்கநிகர்க் குணக்குன்ரும் சந்திர மோகன்
தமிழவேள் திறம்பாடும் பணியே கொண்டார்!
இங்குள்ளார் யாவருக்கும் என்றன் நன்றி!
இயம்பிடுவேன் மனத்தாலே ஏற்பீர் ஏற்பீர்!'' 11

''செந்தமிழைக் காப்பதற்குச் சீராகத் தொண்டாற்றும்
நந்தமிழர் இங்குண்டோ நாடுவதேன் - நன்மனமே!
உள்ளமெனும் கோயிலிலே ஒண்டமிழை ஏற்றி, டுவான்
செல்லப்பன் உண்டேநீ செப்பு!'' 12

குறிப்பு வினை

டாக்டர் ஏ. **ஆதித்தன்**

இலக்கண ஆசிரியர்களும் மொழியியல் வல்லுநர்களும் பெரிதும் ஆர்வம் காண்பித்த குறிப்பு வினை பற்றி ஒரு சில கருத்துக்களைச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிப்பு வினை பற்றி அனைத்து இலக்கண நூற்களும் குறிப்பிட்டுள்ளன. தொல்காப்பியம் வினைச்சொற்களை வினை, குறிப்பு என இரண்டாகப்பாகுபாடு செய்து இக்குறிப்புவினைகள் 'உடமைப் பொருள்,' 'நிலப்பொருள்', 'ஒப்புப்பொருள்,' 'பண்புப்பொருள்' அடிப்படையில் தோன்றுமெனக் குறிப்பிடுகின்றது.

நேமிநாதம் வினைக்குறிப்பு வடிவங்கள் உயர்திணையிலும் அஃறிணையிலும் அமையும் எனச் சுட்டுகின்றது; மேலும் இவை 'பண்பு', 'உடைமை', 'நிலம்' அடிப்படையில் தோன்றுமெனவும் கூறுகின்றது.

நன்னூல், இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகியன குறிப்பு வினைகள் 'பொருள்', 'இடம்', 'காலம்' 'சினை', குணம்,' 'தொழில்' ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுமெனக் குறிப்பிடுகின்றன.

இலக்கணக்கொத்து 'வினைக்குறிப்பு' எனக் குறிப்பு வினையினைச் சுட்டுகின்றது. தொன்னூல் விளக்கம் குறிப்பு வினையினை 'பகுக்கும் பதப்பேர்' எனச் சுட்டி இவற்றைப் பெயர்களாகவே கருதுகின்றது.

வீரசோழியம், பிரயோக விவேகம் ஆகியன குறிப்பு வினைகள் பத்து நிலைகளில் அமையுமெனக் கூறுகின்றன.

இலக்கண நூல்கள் பெரும்பான்மையும் குறிப்புவினை அமையும் நிலையினையே சில பெயர் வகைகளுக்கும் கூறுகின்றன உரையாசிரியர்கள் இத்தகு பெயர்களுக்கும் குறிப்பு வினைகளுக்கும் ஒரே வடிவங்களையே சான்றுகளாகக் கொடுத்துள்ளனர். இதுவே பெரும்பான்மையான குழப்பங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

மொழியியல் அறிஞர்களான இராபர்ட் கால்டுவெல், தெ. பொ. மீனாட்சிசுந்தரம், மு. வரதராசன், மோ. இசரேயல், க. மீனாட்சி

சுந்தரம், ந. ஜெயராமன், சு. சிவதாணு, ச. அழகேசன் போன்றோர் குறிப்பு வினை பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளனர்.

சில அறிஞர்களும் இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்கள் வழிநின்று குறிப்பு வினை என்னும் பாகுபாட்டின் தேவையினை உணர்த்தியுள்ளனர். இன்னும் சில அறிஞர்கள் குறிப்புவினை களுக்கும் இலக்கண ஆசிரியர்கள் சுட்டும் சில பெயர் வகைகளுக்கு மிடையே காணப்பெறும் ஒற்றுமை அடிப்படையில் குறிப்பு வினைகளைப் பெயர்களாகக் கொண்டுள்ளனர்.

மோ. இசரயேல் குறிப்பு வினைகளை அவற்றின் அமைப்பு நிலையில் பெயரடியிலிருந்துதோன்றுவன, பெயரடையடியிலிருந்து தோன்றுவன, குறை வினையடியிலிருந்து தோன்றுவன என மூன்றாக வகைப்படுத்தி முதலிரு வகையினைப் பெயர்களாகவும் குறைவினையடியிலிருந்து தோன்றும் வடிவங்களைக் குறிப்பு வினைகளாகவும் கருதியுள்ளார்கள்.

கையன் — பெயரடி

கரியன் — பெயரடையடி

இலன் — குறை வினையடி

குறைவினையடியிலிருந்து ஆக்கம் பெற்ற வடிவங்கள் வினையெச்சம், வினையடையால் தழுவப்பெற்று வருதலின் இவை குறிப்பு வினைகள் என்று கருதப்பட்டுள்ளன. பெயரடையடியிலிருந்தும், பெயரடியிலிருந்தும் ஆக்கம் பெற்ற வடிவங்கள் பெயரெச்சம், பெயரடையால் தழுவப்பெற்று வருதலின் இவை பால்காட்டும் ஈறு பெற்ற பெயர்களாகக் கருதப்பட்டுள்ளன.

இத்தகு பாகுபாட்டின் அடிப்படைக் கோட்பாட்டிற்கு முரண் பட்ட சான்றுகள் பதினெண்கீழ்க்கணக்கின்கண் காணக் கிடைக் கின்றன. ஈண்டுப் பெயரடையடியிலிருந்து தோன்றிய வடிவம் வினையடைகளால் தழுவப்பெற்று வருகின்றன.

— *அந்தணர் ஒத்துடைமை ஆற்ற மிக இனிதே*

(இனியவை நாற்பது 7 : 1)

— *அறிந்துரைத்தல் ஆற்ற இனிது*

(இனியவை நாற்பது 31 : 4)

எனவே தொடரியல் பண்பினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பு வினைக்கு விளக்கம் தருதல் அரிது.

இலக்கியங்களில் பெயரடி, பெயரடையடியிலிருந்து தோன்றிய வடிவங்கள் பெயரடை, வினையடை இரண்டாலும் சிறப்பிக்கப் பெற்றுவர, குறைவினையடி எனப்படுபவற்றிலிருந்து தோன்றிய வடிவங்கள் வினையடைகளால் மட்டுமே சிறப்பிக்கப்பெற்று வருகின்றன.

இனி, குறிப்பு வினை பற்றிய விளக்கத்தினை விரிவாகக் காணலாம். குறிப்பு வினைகள் எழுவாயாகச் செயல்படுவதால் இவை பெயர்களே எனக் கருதுகின்றவர்களும் உண்டு. சங்க இலக்கியத்தில் பல வினைமுற்று வடிவங்கள் எழுவாயாக அமைந்து வினையாலணையும் பெயர்களாகச் செயல்பட்டுள்ளன.

எனவே வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு வினை வடிவத்தையும் பெயர் வடிவத்தையும் வேறுபடுத்துதல் கூடாது. வினைமுற்று வடிவங்கள் வினைகளாகச் செயல்படும் நிலையினைச் சுட்டி நிற்கும். இவ்வினைமுற்று வடிவங்கள் வினையாலணையும் பெயர்களாகச் செயல்படும் நிலையில் வினை செய்த கருத்தா வினையே சுட்டி நிற்கின்றன.

இதனைப்போன்று குறிப்பு வினை வடிவங்கள் பெயர்களாகவும், வினைகளாகவும் செயல்பட வாய்ப்புஉண்டு.பெயர்களாகவும் வினை களாகவும் செயல்படும் நிலையில் இவற்றிடையே வேறுபாடுகள் காணக்கிடைக்கின்றனவா என்பதனைக் கண்டறிதல் வேண்டும்.

கரியன் வந்தான்
— பெயர்

இராமன் கரியன்
— வினை

ஈண்டுக் கொடுக்கப்பட்ட சான்றுகளில் 'கரியன்' என்னும் வடிவம் பெயராகவும் வினையாகவும் செயல்படும் நிலையில் வேறு பாடு காணப்படுகின்றது. முதல் தொடரில் 'கரிய நிறத்தை உடையவன்' என்ற பொருளில் எழுவாயாகச் செயல்படுகின்றது; இரண்டாவது தொடரில் 'கரிய நிறத்தை உடையவன் ஆகும்' எனும் முற்றுப் பொருண்மையினைத் தந்து வினையாகச் செயல் படுகின்றது.

இங்குச் சூழலே பொருளையும், செயல்பாட்டையும் வேறு படுத்தும் அடிப்படையாக அமைந்துள்ளது.

'கரியன்' என்பது பயனிலையாகச் செயல்படுவது போன்று ஏனைப பெயர்களும் பயனிலையாகச் செயல்படுவதுண்டு. ஆதலின் 'கரியன்' என்பது பெயர்ப்பயனிலையே என்று கருதுவாரும் உண்டு.

இது மரம்

இவன் கரியன்

'மரம்', 'கரியன்' என்பன பயனிலையாக இருப்பினும் இரண்டிற்குமிடையே வேறுபாடு உண்டு.

இராமன் வந்தான் > வந்த ராமன்

இவன் கரியன் > கரிய இவன்

இது மரம் > மரம் ஆகிய இது

தெரிநிலை வினைமுற்றுக்கள் எச்சமாவது போன்று 'கரியன்' என்னும் பயனிலை வடிவம் 'கரிய' என எச்சமாக மாற்றம் பெறுகின்றது. ஆனால் 'மரம்' என்னும் பயனிலை வடிவம் எச்சமாக மாற்றம் பெறுவதில்லை. 'ஆகும்' என்னும் ஆக்க வினையின் 'ஆகிய' என்னும் எச்ச வடிவமே 'மரம்' என்பதனை எழுவாயுடன் இணைக்கத் துணை புரிகின்றது.

எச்சமாகும் பண்பினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பு வினை வடிவங்களை பயனிலையாகச் செயல்படும் ஏனைய பெயர் வடிவங்களிலிருந்து வேறுபடுத்திக் காண இயலும்.

குறிப்பு வினை குறிப்பாகக் காலம் காட்டும் என்ற கருத்து ஏற்புடையதே

கையன் < கை—ஐ உடை - (ய்) - அன்
|| ||
ϕ ϕ

ஈண்டு வினையின் அடி தொக்கு வர, அதன் ஈறு 'கை' என்னும் வினையோடு இணைந்து வருகின்றது. எனவே வினை யினைச் சுட்டும் பகுதி வெளிப்பட்டு வரா நிலையில் இது குறிப்பு வினை என்று கருதப்படுகின்றது.

'கையன்' என்பது இறந்த காலத்தைக் குறிக்கின்றது. இத்தகு குறிப்பு வினைகள் தொடரில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உரித்தாகி வரும் காலக்குறியீடு இன்மையால் உரையாசிரியர்கள் குறிப்பிடுவது போன்று முக்காலத்திற்கும் உரியதாகக் கூறுதல் இயலாது.

ஈண்டுக் கூறப்பெற்ற செய்திகளிலிருந்து கீழ்க்கண்ட முடிவு களுக்கு வருதல் இயலும் :

1. குறிப்பு வினைகள் அனைத்தும் பயனிலையாகச் செயல் படுங்கால் வினைவடிவங்களே.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நன்னர் வழக்கம். இத்துறை, நாணிகண்களை மூடுவதற்கு முன்பும், கையை எடுத்த பின்பும் வேறாக மாறுபட்டு, அகப்பொருள் துறைக்கேற்ப, நுண்ணிய உட்பொருள் கருத்துக்களோடு சிலேடை யாக அமைந்து விளங்கும். பாரதியார், இத்துறைவழி, காதலனும் காதலியும் அன் பால் ஒருயிராகிக் கலக்கும் காதலுறவுத் தொடர்பைப் பற்றி முதற்கண் எடுத்துக் கூறி, அத்தொடர்பு, பின்னர் தெய்வக் காதலாக மாறி உயிர் இறையோடு இரண்டறக் கலக்கும் நித்திய மாய உறவினை புலமை உபாயத்தால் எளிமைப்பட தெரியுமாறு உரைப்பாராயினார். காதலன்பின் உரிமையின் ஆட்சியை, 'நாணிக்கண் புதைத்தல்' எனும் துறையில், பாரதியார் புலப் படுத்திய பொழிப்பு யாதோ வெனிற்கூறுதும்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

2. குறிப்பு வினைகள் தொடரில் செயலாற்றுங்கால் ஒரு குறிப்பிட்ட காலத்தை மட்டுமே உணர்த்தும். உரையாசிரியர்கள் குறிப்பிடுவதுபோன்று முக்காலத்திற்கும் பொருந்தி வருதலில்லை.

3. குறிப்பு வினைகள் பெயரடை, வினையடை ஆகிய இரண் டாலும் தழுவப்பெறுகின்றன.

4. குறிப்பு வினைகளைச் சூழலே இதே அமைப்பினைக் கொண்ட பெயர் வடிவங்களினின்றும் வேறுபடுத்துகின்றன.

5. பயனிலையாகச் செயல்படும் குறிப்பு வினைக்கும் ஏனைய பெயர்ப் பயனிலைகளுக்கும் எச்சமாகும் நிலையில் வேறுபாடு காணப்படுகின்றது.

எனினும் மூவகை அமைப்பினைக் கொண்ட குறிப்பு வினை களில் பெயரடி, பெயரடையிலிருந்து தோன்றிய குறிப்பு வினைகள் அமைப்பு நிலையில் குறைவினையடியிலிருந்து தோன்றிய குறை வினைகளினின்றும் வேறுபட்டுக் காணப்படுவதாலும் இவற்றி லிருந்து வினையெச்ச வடிவங்கள் ஆக்கம் பெறாமையாலும் குறிப்பு வினைகள் அனைத்தையும் உள்ளடக்கும் ஒரு இலக்கணம் அமைத்தற்கு இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்னமும் குறைவினையடியிலிருந்து தோன்றிய குறிப்பு வினையில் தொழில்நிகழ்வு வெளிப்பட்டு நிற்கஏனைய குறிப்பு வினைகளில் தொழில் நிகழ்வு தொக்கு வருகின்றது. ஆதலின் குறிப்பு வினை பற்றிய கருத்து மேலும் ஆராய்தற்குரியது.

'காதலி ! என்ன கருத்துக் கொண்டு கண் புதைக்கிறாய்! எழில் நலம் வளர்ந்தமைந்த கன்னிப்பருவத்திலும் உன்னைப் பரிவுடன் கண்டு அன்பின் ஊற்றால் முத்தமிட்டுக் கலந்தது இல்லையோ ? அன்னியமாக நம்முள் யாதும் எண்ணுவதற்கில்லையே ! காதல் பிணைப்பால் நாம் முன்னரே பிறந்திருந்தோம் ! நாணத்திற்கு இடமில்லையே!

இரண்
டாவியு மொன்றாகுமெனக் கொண்டதில்லையோ ?
பன்னிப் பலவுரைகள் சொல்லுவதென்னே ? துகில்
பறித்தவன் கைபறிக்கப் பயங்கொள்வனோ ?
என்னைப் புற மெனவுங் கருதுவதோ ? கண்கள்
இரண்டினி லொன்றை யொன்று கண்டு வெள்குமோ ?
பாட்டுஞ் சுதியு மொன்று கலந்திடுங்கால் - தம்முட் !
பன்னியுப சரணை பேசுவதுண்டோ ?
நீட்டுங் கதிர்களோடு நிலவு வந்தே—விண்ணை
நின்று புகழ்ந்து விட்டுப் பின் மருவுமோ?
மூட்டும் விறகினையச் சோதிகவ்வுங்கால் – அவை
முன்னுபசாரவகை மொழிந்திடுமோ?
நேற்று முன்னாளில் வந்த உறவன்றடீ; மிக
நெடும் பண்டைக்கால முதல் நேர்ந்து வந்ததாம்.
போற்றுமிராம னென முன்பு தித்தனை, - அங்கு
பொன் மிதிலைக் கரசன் பூமடந்தை நான்;
ஊற்றமு தென்ன வொருவேய்ங்குழல் கொண்டோன்
கண்ணன்
உருவ நினக்கமையப் பார்த்தனங்கு நான் ;
முன்னை மிகப் பழமையிரணியனாம் - எந்தை
மூர்க்கந்த விர்க்கவந்த நரசிங்கனீ,
பின்னையோர் புத்தனென நான் வளர்ந்திட்டேன்-ஒளிப்
பெண்மை அசோதரை யென்றுன்னை யெய்தினேன்.
இன்றுங் கடைசிவரை ஒட்டிருக்குமாம்;—இதில்
ஏதுக்கு நாணமுற்றுக் கண்புதைப்பதே ?

பன்னெடுங்காலமாக, காதல் இணைதலால் ஏற்பட்ட உறவு நம்மால் உறுதிப்பட தொடர்ந்து திகழ்ந்து வந்துள்ளதினால், அவ்வுண்மையில் சாத்திரத்தேர்ச்சியுற்றார் கூறியபடி பழுதிருக்கக் காரணமில்லை. ஆதலால் யாம் பிரியோம் ! இனி நாணம் ஏன்?" என்ப

தாகும். ஈங்கு காதல் தொடர்பின் தொந்தத்து உட்பொருட் குறிப்பு நயமாகவும் வினயமாகவுமுள்ளது காணப்படும். மற்றும் இறை யோடு ஒன்றினர் வாழ்வே வாழ்க்கையாதலால், அது கிடைத்தற் கரிய பேருகுமென்பதாகிய தொனிப்பொருள் தோன்றுதலையும் நோக்குக, பழங்காலத்து காணுத நெடு உறவினைத் தெரிவித்ததை யும் காணப்படும். வான், நிலவு, கதிர் ஆகியவற்றின் அழகினை வெளிப் படுத்தற்கு இன்ப உவமைகளை நயமுடன் சிறப்பாக பயன்படுத்தப் படுவதையும், பாட்டும் சுதியும் போல கலந்த காதலுயிர்கள் இரண்டும் ஒன்றானால் உபசார வகைக்கு வழியில்லை யெனவும், மற்றும் துகில் பறித்தவன் கைபறிக்கப் பயங் கொள்வானோ ?, இரு கண்கள் ஒன்றையொன்று கண்டு வெள்குமோ என்றது போன்ற உயிரியலுக்குப் பயனுறும் அருமை மொழிகளையும் அறவுரைகளை யும் திறம்பட எடுத்தாளப்பட்டிருப்பதையும் ஒருங்கே காணின், அவை மகிழத்தக்க சுவைகள் மலிந்தன யென எண்ணத் தக்கன. பாரதியார் தம் பட்டறிவில் கண்டவற்றை 'நாணிக்கண் புதைத்தல்' எனும் துறையில் உயிரியலுக்கும் உலகியலுக்கும், அருளியலுக்கும் பொருந்துமாறு, சாமானியப் பொருட்களைக் கொண்டு அசாதாரண மான தொடர்புகளை உண்டாக்கி, தனக்கென அமைந்த தனி நடையால், இனிமையும் நயமும் தோன்ற இறையருள் சிந்தனை யோடு மனத்தெளிவுடன் எடுத்துரைப்பது நெஞ்சத்தைப் பிணிப்ப தாகும்.

அடுத்து, காதலி கண்ணம்மாவை குறிப்பிட்ட இடத்தில் காதலன்பன் காணாது வருந்தும் நிலையை, பாரதியார் 'குறிப்பிடம் தவறியது.' எனும் பகுதியில் குறிப்பிடுவது உணரத் தக்கது.

கண்ணம்மாவின் அன்பின் ஆழத்தை கண்டுணர்ந்த காதலன், தன்னிடத்தே தலைவி கொண்டுள்ள பேரன்பின் பெற்றியினை நாம் உணரும்படி இப்பகுதி துணை புரிவதை பாரதியார் காட்டும் நயம் சிந்திக்கற்பாலது. உலகியலில் காதலனுக்குப் பிரிவுத் துன்பம் பொறுத்தல் அரிது.

'வார்த்தை தவறிவிட்டாய்—அடி கண்ணம்மா !
மார்பு துடிக்குதடீ !
பார்த்தவிடத்திலெல்லாம்—உன்னைப் போலவே
பாவை தெரியுதடீ !'

'வானிடத்தில் வெண்ணிலா தவழுகிறது. நானொருவன் மட்டும் பிரிவென்பதோர் நரகத்துழல்வதோர் நரகத்துழல்வதோ; பிரிவால் மேனி கொதிப்படைகிறது; தலைசுற்றி வேதனை புரி கிறது. பிரிவுக் கொடுமையினைப் பொறுக்க முடியவில்லை;

மகிழ்ச்சியெய்திட மனக் குறையும் தீர்ந்த பாடில்லை; எனக் கண்ணம்மா மீது கொண்ட காழ்த்த அன்பினால், காதலன் ஏங்கித் துன்புறுகிறான். அபரபக்தியின் பான்மையால், கண்ணனிடம் காதலுறவு கொள்பவர் ஒரு கால்,

'கண்ணன் தன்னையிழந்துவிடில், ஐயகோ! பின் சகத்தினில் வாழ்வதிலேன்' என, பிரிவுத் துயர் தாங்காது இருட் குலங்கள் சூழ வருந்துவது இயல்பு என்பது ஈங்கு சற்றே கவனத்திற்குரியது. துன்பிற்குப் பின்னர், நுகரவிருக்கும் வாழ்வின் பத்தை உணர்த்து வான்வேண்டி பாரதியார், கண்ணம்மாவும் காதலனும் அபர பக்தி யுடன் தூய காதலன் பின் இன்பநெறியில் ஒன்றுகூடி கலந்து விடுவதை, நன்கு புலப்படுத்தி விடுகிருர்.

'கண்ணம்மா—என் காதலி' (யோகம்) என்ற காதல் கவிதை, காதலிருவரையும், இதயக்கவர்ச்சியின் நெகிழ்ச்சியின் வழி காதல் ஒருமைப் படுத்தும் யோகச் செவ்வியினை அத்வைத அனுபவ முறைபில் உணர்த்தும் ஓர் இன்பநாத விருந்து. உயிரின் காதல் வாழ்வெல்லாம் யோகமென்றும் யோகப் பொலிவால், ஆனந்த வாழ்வும் ஆன்ம ஒளியும், விஞ்ஞான சித்தியும், திட்டமாய முக்தியும் எளிதில் பெற இயலும் எனப் பாரதியார் இக்கவிதையில் குறிப்பிட்டு, மண்ணுலகில் விண்ணின்பம் விளங்கும் உளவினை உறுதி தோன்றக் கூறுகிறார். மற்றும் அவர், உடலும் உயிரும் போல விளங்கும் ஆத்ம சித்தியும் ஞான சக்தியும், காதல் யோக வாழ்வில் மிளிர வைத்தால், பூரண சச்சிதானந்தம் அத்தகைய காதல் வாழ்வில் உருவாகுவதைச் சுட்டிக் காட்டி விடுகிறார். மற்றும் அவர் எட்டு மிரண்டு மொன்று மிணங்கி ஒட்டி வாழும் வகையையும் யோக நெறி வழி யாக்கை முழுதும் அமுதை நிரப்பித் தேக்கி வாழும் பயனைக் கூட்டுவிக்கும் உபாயத்து உண்மைக் கருத்தினை யும் எளிதில் உணருமாறு காதற் புகழ்ச்சியோடு காட்டிவிடுகிறார்.

பாரதியார், காதலை தெய்வ வாழ்வின் கலையாகச் சித்தரித்து அதன் சீறும் வீறும் நிறைமுறையால் சக்தியின் சிருட்டிக் கனவோடு வளரும் யோக சித்தியை விளக்குகிருர். மற்றும் அவர் காதல் வாழ்வு நிலையில் காதலன் தன் காதலியை சக்தியாகவும், காதலி தன்காதலனை இறைவனாகவும் எவ்வெவ்முறையால் பயன் படுத்தும் வகை கண்டு மலர்ச்சியுற்று காதலிக்க வேண்டு மென்றதைப் புகன்று, காதலைத் தவக்கனலாக மாறச் செய்யின் அஃது இன்பப் பொலிவுடன் இறைவனைச் சாரும் உறுதியையும் விளங்கவைக்குமென்பதையும் புலப்படுத்தியுள்ளார். சீவன் முக்தியை நாடும் தெய்வக் காதலனும் காதலியும் அன்பின்

அருளாட்சியால் ஒருவராகி, சிவனும் சிவனும் போன்று ஈரறக் கலத்தலை, அற்புத யோகநெறி விளக்கமாக பாரதியார் நுட்பமாகக் கூறி அதனில் உள்ளம் ஒருமையோடு நாடும் தெய்வப்பரிபூரண பரமானந்தத்து இரகசியத்தை எளிய முறையில் பின்வருமாறு கவிதை காட்டும் விந்தையாக உணர்த்திவிடுகிறுர்.

காதலன், கண்ணம்மாவை 'நிறைச் சுடர் வானொளியே! எல்லையற்ற பேரழகே! சூறையமுதே கண்ணம்மா! நீயே, ஞான வொளி வாழ்வு நிலை! ஊறு சுவையே! கட்டியமுதே! ஆசை மதுவே! கனியே! கண்ணின் மணியே! வேதமே! நாதமே! என அன்பொழுக காதல் கனிவில், விளித்து, பின்னர் அன்னவர் இரு வரும் ஒன்று கலப்பதை,

'பாயுமொளி நீ எனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு;
தோயுமது நீயெனக்கு, தும்பியடி நானுனக்கு;
வீணையடி நீயெனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும்வட நீயெனக்கு. புதுவயிர நானுனக்கு;
வானமழை நீயெனக்கு, வண்ணமயில் நானுக்கு;
பானமடி நீயெனக்கு, பாண்டமடி நானுனக்கு;
வெண்ணிலவு நீயெனக்கு, மேவுகடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீயெனக்கு, பாட்டினிமை நானுனக்கு;
விசுகமழ் நீயெனக்கு, விரியுமலர் நானுனக்கு;
பேசுபொருள் நீயெனக்கு, பேணுமொழி நானுனக்கு;
காதலடி நீயெனக்கு, காந்தமடி நானுனக்கு;
வேதமடி நீயெனக்கு, வித்தையடி நானுனக்கு;
நல்லவுயிர் நீயெனக்கு, நாடியடி நானுனக்கு;
செல்வமடி நீயெனக்கு, சேமநிதி நானுனக்கு;
தாரையடி நீயெனக்கு, தண்மதிய நானுனக்கு;
வீரமடி நீயெனக்கு, வெற்றியடி நானுனக்கு:
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கு மின்பமெல்லாம்
ஒருருவமாய்ச் சமைந்தாய்! உள்ளமுதமே! கண்ணம்மா!

என உள்ளம் தழைக்குமாறு பாரதியார் நம்முணர்வை, காதல் அனுபவித்து மோன மெய்மயிற் செலுத்தி இன்புறுத்துவாராயினார். எனவே இக்கவிதை, இடைமறை காயென இருக்கும் தெய்வீக இயற்கைச் சக்திகளை நம்பால் நிலைபெற வைத்து, காதலறிவு பற்றிய மனோதத்துவத்தை, காதல் யோக வாழ்வில் மலரவைக்கும் தந்திரத்தைக் கற்பிக்கச் செய்யும், பரஞான மெய்க்கீதையாகத் திகழ்வது வெள்ளிடைமலை.

வரலாறு கண்ட உறையூர்

பேராசிரியர் **சி. கோவிந்தராசனார்.**

சங்ககாலச் செய்யுட்களினால் அறியவருகின்ற சோழப்பெரு நகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்னும் இரண்டுமே யாகும். உறையூர் நாட்டின் தலைநகராகவும், காவிரிப்பூம்பட்டினம் துறைமுகப் பட்டினமாகவும் அமைந்திருந்தன. உறையூர் உறந்தை எனவும் கோழியூர் எனவும் வழக்கப்படும்.

முறஞ்செவி வாரணம் முன்சமமுருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்''[1]

(முறஞ்செவி வாரணம்—யானை, புறஞ்சிறை வாரணம்—கோழி) என இளங்கோவடிகள் கூறுதலின், ஓர் கோழியானது யானையொன் றைப்போரிலே தொலைத்த இடத்தில் அமைக்கப்பட்ட நகரமாதலன் கோழி என்றுபெயராயிற்று எனவும், யானையை வெற்றிகண்ட கோழி தோன்றின இடம் வெற்றிக்குரிய வலியுடையதென்று கருதி, அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர் அமைத்த பொழுது கோழியின் சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனால் புறம்பே சிறையை உடைய கோழ் என்றாயிற்று என்றும் உரையாசிரியர் விளக்கிக்கூறியுள்ளார்[2]. சங்ககாலச்சோழரின் முதற்பெருந்தலைநகர் உறையூரேயாகும், அதனால் சோழமன்னன்" கோழியான்" என்றும் அழைக்கப்பட்டான்[3] அக்காலத்தில் சோழ நாட்டுக் கடற்கரை வள நகராக இருந்த காவிரிப்பூம்பட்டினம் எப்பொழுது எதனால் தலைமைத் தலைநகராயிற்று என்பதைக் கண்டறிய தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம் பட்டினம் தலைநகராக இருந்தது.

செல்வத்திற்கு உறைவிடமாக இருந்தது. சான்றோர்கள் பலர் உறைந்திருந்தனர். எல்லா வளமும் உறையும் ஊர்; என்றெல்லாம் பொருள் கொண்டு உறையூர் என்ற பெயருண்டாயிற்றென்று அறிஞர் கூறுவர். மற்றும்.

''மலர்புகழ் வண் தமிழ்ச் சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில் வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூராம்
உறையூர்''

என்று சேக்கிழாரும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.[4]

சங்ககாலச் சோழருக்குத் தலைநகராக விளங்கிய உறையூர். ''மறங்கெழுசோழர் உறந்தை.'[5] 'அறந்துஞ்சு உறந்தை"[6] 'மாவண்

தித்தன் வெண்ணெல் வேலி உறந்தை'[7] 'பல நல்லபுலனணியும் உறந்தை'[8] 'கறங்கு இசை விழவின் உறந்தை[9]' 'அறங்கெழு நல் அவை உறந்தை '[10] என்றெல்லாம் புலவர் புகழ்ந்துரைப்பதற்குரிய தகுதியோடு விளங்கியது. புகழ்ச் சோழர் கோப்பெருஞ்சோழர் ஆகியோர் பிறந்த இடமாகக் குறிக்கப் பெறும் புகழுடையது. கரிகால் சோழன், கோப்பெருஞ்சோழன், நலங்கிள்ளி, கிள்ளிவளவன் ஆகிய சங்க காலச் சோழருடன் குலோத்துங்க சோழனும் ஆட்சி செய்த ஊர். புலவர்களில் இளம் பொன் வாணிகனார், ஏணிச்சேரி முடமோசியார்; மருத்துவன் தாமோதரனார், முதுகண்ணன் சாத்தனார், முது கூத்தனார் முதலிய புலவர்கள் வாழ்ந்த நகர், முத்து வீரியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய முத்து வீர உபாத்தியாயருக்குரிய ஊர். இவைகளெல்லாம் உறையூருக்குரிய புகழ்ச்சி உரை ஆகும்.

இளங்கோவடிகள் சிறப்பித்த நகரங்கள் நான்கு. அவை,

''மாடமதுரையும் பீடார் உறந்தையும் கலிகெழு வஞ்சியும் ஒலி புனல் புகாரும்'' என்று விளக்கப் பெறும் மதுரை, உறையூர், வஞ்சி, புகார் ஆகிய நான்கு நகரங்களேயாகும்[11]. இவற்றுள் உறந்தையும் புகாரும் சோழருக்குரியவை. மதுரை பாண்டியர்க்கு உரியது. வஞ்சி சேரர்க்கு உரியது. இவ்வாறு மூவேந்தருக்கும் உரிய தலை நகரங்கள் கூறப்பட்டதாயினும், சோழருக்குரிய உறந்தையும் புகாரும் ஆகிய நகரங்களுள், 'பொதுவறு சிறப்பின் புகாரென்றும்[12], பேராச் சிறப்பின் புகார்[13] என்றும் இளங்கோவடிகள் புகாரைச் சிறப்பித்திருப்பதால் அவர் காலத்தில் உறையூர் பழமைக்குரிய பெருமையோடு பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னனின் காவலில் இருந்ததென்பது போதரும். உறந்தைக்குரிய பெருவிழா பங்குனித் திருவிழாவாகும். அதனோடு புதுநீர் விழாவும் பொலிந்து நின்றதால்' கறங்கு இசை விழவின் உறந்தை'' என்று அகப்பாட்டில் சிறப்பிக்கப் பெற்றது[14].

காவிரியின் நீர் நிலைத்து நின்ற சிறு மதகுகளுடன் ஊர்ப்புறமாக ஆற்றங்கரையை அடுத்த கொல்லைப்புறங்களையும் உடையதாக உறையூர் அமைந்திருந்தது. இதனை,

> ''*புனல் பொரு புதவின் உறந்தை*
> *காவிரிப்படப்பை உறந்தை*''

என்னும் அகநானூற்றடிகள் நன்கு புலப்படுத்துகின்றன.[15]

'உள்ளாற்றுக் கவலை புள்ளிநீழல்' (புறம். 219) வடக்கிருந்த கோப்பெருஞ்சோழனும், அவன் குறிப்பிற்கு ஏற்ப உடனாக வடக்

கிருந்த அரசச் சுற்றமும் நடுகற்களாக நின்ற பகுதியும் இக்காவிரிப் படப்பையுள் நின்ற வண்டல் குறைப்பகுதியேயாகும்.[16].

கி. பி. 150ல் கடற்செலவிற் புகழ்பெற்ற மேனாட்டு அறிஞர் தாலமியின் யாத்திரைக் குறிப்பிலும் உறையூரின் சிறப்பியல்புகள் குறிக்கப்பட்டன கி பி 346 இல் மாரீசு எரித்தராலி என்பவரும் உறையூரின் பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளதாக வரலாறுகள் கூறு கின்றன. உரோமரின் வணிகத்தொடர்பு உறையூரில் இருந்த வுண்மைக்கோர் சான்றாக யவன நாட்டு நாணயங்கள் இப்பகுதி யில் புதைபொருளாகக் கிடைத்திருக்கின்றன. இவ்வாறு சங்க காலத்தில் பல்வளமும் பெருக்கிநின்ற பழமையுடன் சிலப்பதிகார காலத்தில் விளங்கிய உறந்தையின் அமைப்புடன் பெருமையினை யும் ஓரளவு தொகுத்துக் கூறப்படுகின்றது.

வரலாறு கொண்ட உறந்தை

தமிழக வரலாற்றுச் சான்றுகளுள் ஒன்றாக அமைந்துள்ள கல் வெட்டுகளுள் உறந்தையைப் பற்றிய செய்திகள் உரைக்கப் பட்டுள்ளன. இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுடைய ஆட்சிக்காலத்தில் (கி.பி. 957-970) 'உறையூர்க்கூற்றத்து உறையூர்' என்ற அளவில் உறையூர் குறிப்பிடப்பட்டுள்ளது[17] பின்னர். முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் ஆகியோர் காலங்களில் 'கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து உறையூர்' என்றும் 'வீரராஜேந்திரன் காலத்தில்' 'இராச கெம்பீர வளநாட்டு உறையூர் கூற்றத்து உறையூர்' என்றும் பிற்காலங்களில்' 'திருச்சிராப்பள்ளி உசாவடி இராச கெம்பீர வளநாட்டு உறையூர் என்றும் 'சிவபாத சேகரபுரத்து உறையூர்' என்றும் கம்பண்ண வுடையார் காலத்தில் (கி. பி. 1374-75) 'மழைநாட்டு உறையூர்' 'தென்கரை உறையூர்' என்றும் தமிழகக் கல்வெட்டுகளில் கூறப் பட்டுள்ளன.

'வடக்கயிறு தேய்ந்து தளைக்கயிறு' ஆனதைப்போன்று உறை யூரின் நிலை காலப்போக்கில் வரவரக் குறுகி காவிரியின் தென்கரை ஊர்களுள் ஒன்றாகி நின்றதைக் கல்வெட்டுச் சான்றுகளே புலப் படுத்துகின்றன.

உறையூர் கூற்றத்துள், நாவலூர், தலைவாய்ப்பாடி, நாநலூர் கொடியாலத்தூர், கருப்பூர், பருத்திக்குடியான தம்பிக்கினியான், நல்லூர், அமணக்குடி, அல்லூர், சாதனூர், திருவடகுடி, மேக்குடி, கற்குடி, சகதேக வீரச் சதுர்வேதி மங்கலம், புலிவலம், உறையூர் ஆகிய ஊர்கள் அடங்கி இருந்தன[19]. உறையூர் கூற்றம், வடகவே

காவிரியும், தெற்கே உய்யக்கொண்டான் ஆற்றுடன் கற்குடி மலையும் கிழக்கே சிராப்பள்ளி குன்றும், மேற்கே குளிர்தண்டலையும் (குளித்தலை) எல்லைகளாக அமைந்திருந்ததென்று அளவிட்டறியலாகும்.

உறையூரும் – குன்றும் :

சங்ககாலத்தில் சோழ நாட்டின் தலை நகராகவும், சரித்திர காலத்தில் ஒரு கூற்றத்தின் தலைமை ஊராகவும் நின்ற அளவில் உறையூர் ஓரளவு சிறப்புடன் இருந்ததாகவே தெரிகின்றது. சங்க காலத்தில் உறையூர்க்கு கிழக்கே ஒரு நெடிய குன்றுஇருந்ததென்று குறிக்கப்பட்டது. இதனை,

> *'கறங்கு இசை விழவின் உறந்தைக்குணாது*
> *நெடும் பெருங் குன்றம்'* (அகம் 4)

என்னும் அகநானூற்றடிகள் விளக்குகின்றன[20]. அதுவே இப்பொழுது கோட்டையும் கோயிலுமாக நிற்கும் சிராப்பள்ளிக்குன்றம் சங்ககாலத்தில் இம்மலைமேல் கோயிலோ பிறவாறு சுட்டுவதற்குரிய சின்னங்களோ இல்லை. உறையூர்க்கு கிழக்கே தனித்து உயர்ந்து நின்ற மலை என்ற அளவில் கூறப்பட்ட பின்னர் மலையிலுள்ள குகையொன்று சமண முனிவரின் வாழ்விடமாக அமைந்து கற்படுக்கைகளுடன் விளங்கியது. அங்கு வாழ்ந்த சமணத் தலைவரின் பெயர் சிரா என்பதென்றும், அத்துறவிக்குரிய கற்படுக்கை இருந்தமையால் சிராப்பள்ளி என்ற பெயர் உண்டாயிற்று என்றும் கூறுவர். இக்கருத்திற்கு ஏற்ப இம்மலையின் வடபுறம் அமைந்துள்ள குகையொன்றில் கற்படுக்கைகளும் பிராமிய எழுத்தாலான கல்வெட்டுகளும் உள்ளன.

கி.பி ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னாடெங்கணும் சைவநலம் பெருக்கிய திருஞான சம்பந்தர் மூங்கில்காடுகள் உயர்ந்து நிற்கும் சாரலோடு, கல்லும் செந்தண் புனமும் சுனையும் சூழ்ந்து சிராப்பள்ளி குன்று நின்றதென்றும், அதன்மேல் தொலைவாக கோயில் அமைந்திருந்ததென்றும் தமது பதியப்பாடலுள் விளக்கியுள்ளார்.[21] எனவே, சிராப்பள்ளி மலையின்மேல் சிவன் கோயில் அமைக்கப்பட்ட காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னராகும் என்ற அளவில் கூறத்தகும்.

சிராப்பள்ளி குன்றில் சிவன்கோயில் விளங்கிய காலத்திலேயே உறையூரில் சிவன்கோயிலும் திருமால்கோயிலும் சிறப்புற்றிருந்தன. சிவன்கோயிலிலுள்ள கல்வெட்டுச்செய்திகளால், வேந்தன் முக்கீசுவரம் உடையார், திருவிடைத்தலை மகாதேவர் என்ற பெயர்

களுடன் இறைவன் அழைக்கப்பட்டுள்ளார். கோழியூர் என்ற பெயருண்டான கதையைச்சித்தரிப்பதாக, கோயிலின் தூணொன்றிலும், அம்மன்கோயில் கீழ்ப்புறச்சுவரிலும் யானையொன்றை கோழி மத்தகத்தில் தாக்குவதைப்போன்ற சிற்பம் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. இன்று இறைவனின் பெயர் ஐவண்ணப் பெருமான். (பஞ்சவர்ணேஸ்வர்) இறைவியன் பெயர் ஒளிமதியம்மை காந்திமதியம்மை என்பதாகும். முத்தரையர் காலத்தில் நங்கை ஒளிமதியார் என்ற அரசியின் பெயர் செந்தலைக்கல் வெட்டில் குறிக்கப்பெற்றிருப்பது இவ்வம்மையின் பெயராகவும் இருக்கக்கூடும். வேந்தன் முக்கீசுவரத்தடிகளை திருஞானசம்பந்தர் பாடியுள்ள திருப்பதியத்துள் தமிழக வரலாற்றிலச்சினைகள் நிறைந்துள்ளன. கி பி. ஏழாம் நூற்றாண்டிலோ அதற்கு முன்னரோ சேரசோழ பாண்டிய நாடுகளின் ஒருமைப் பாட்டிற்கு உறையூர் எல்லையாக நின்றதை அப்பகுதிகள் விளக்குகின்றன. அவை :

1. செருவிலாரும்புலி செங்கயலானையினான் செய்த பொருவில் முக்கீச்சரம்''

2. ஒண்புலால் வேல் மிக வல்லவனோங் கெழிற் கிள்ளிசேர் பண்பின் முக்கீச்சரம்

3 தென்னன் கோழியெழில் வஞ்சியும் ஓங்கு செங்கோலினான் மன்னன் முக்கீச்சரம்.

4. சீரினாலங் கொளிர் தென்னவன் செம்பியன் வில்லவன் சேருமுக்கீச்சரம்"

5. மல்லையார் மும்முடிமன்னர் முக்கீச்சரம் என்னும் பகுதிகளேயாகும்.

இவற்றைக் கொண்டு சிந்திக்கின், சேர சோழ பாண்டிய நாடுகளின் எல்லைகட்குரிய கூடல் பகுதியாக ஒரு காலத்தில் உறையூரின் கீழ்ப்பகுதி இருந்ததென்பதும், மூன்று நாட்டு அரசர்களின் பழக்கம் உள்ள தலமே மூக்கீச்சரம் என்பதும் பெறப்படுவதுடன் பல்லவரின் தொடர்பும் இக்கோயிலளவில் இருந்த செய்தியும் புலனாகும். இப்பதிகத் தொடர்கள் வரலாற்றாராய்ச்சிக்குப் பெரிதும் இடம்பெறத் தக்கதாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாம். மற்றும் சோழ நாட்டின் எல்லைப்பகுதிகளுள் ஒன்றாக உறையூர் நின்றதெனும் கருத்திற்குச் சார்பாக, இளங்கோவடிகளும் புகார் முதல் தொடங்கும் கண்ணகி வரலாற்றின் முதற் பெரும் பிரிவை, உறந்தை அளவில் (புகார் காண்டம்) முடித்துள்ளார் என்பது அறியற்பாலதாம்,

சிதைந்த உறந்தை:– ஆற்று அழிவு

பல வளங்களோடு காவிரியாற்றின் தென்கரையில் நின்ற உறந்தை பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆற்றின் வெள்ளத்திற்கு உள்ளாகி இருக்க வேண்டுமென்று தெரிகின்றது. உறையூர்க்கு மேற்கேயுள்ள அல்லூர் என்னும் இடத்தில் காவிரியாறு பெருகி உடைப்பு ஏற்பட்டதால், அப்பகுதிக்குக் கீழ்புறமுள்ள உறையூரும் வெள்ளத்தால் ஓரளவு அழிவு பெற்றிருக்க வேண்டுமென்பதை அறியமுடிகின்றது. இதனை,

''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பர கேசரி வர்மர்க்கு யாண்டு 37-வது இவ்வாண்டு உறையூர் கூற்றத்து அல்லூர் தலைவாச் சான்றோம் பதினொருவோம். இவ்வூர் எங்கள் நிலம் வெட்டிப் பேறு அல்லூர் ஊரின் வடகிழக்கின் நிலம் **காவேரி பெருகி குலைஉடைத்து** மணலிட்டுப் புன்செய்யாகக் கிடக்க ஆறெழாட்டைக் கால் பயிர் ஏறாதே பாழ்கிடக்க இந்நிலத்தை விலைக்குக் கொள்வாரில்லையோ வென்று முற்கூற, அல்லூர் சிறியான் புல்லன்'' – விலைக்குக் கொண்டு — நிபந்தம் செய்தான். (S. I. I. Vol. No. VIII Ins. No. 688)

என்னும் அல்லூர் கல்வெட்டுச் செய்தியினால் நன்கு உணரலாகும்;[22] இவ்வாறு காவிரி வெள்ளத்தால் உறையூர்க் கூற்றம் பன்முறையும் தாக்கப்பட்டு காலப்போக்கில் பள்ளமும் மணல் மேடுகளும் நிறைந்த பகுதியாக இருக்கின்றதென்பதை உறையூர் கூற்ற எல்லைக்குள்ளாகும் திருப்பராய்த்துறை அளவிலும், பழைய ஓடைகளும் மணல் மேடுகளும் இன்றும் எஞ்சிநிற்பதே சான்றாகும். பராய்த்துறைக்குக் கிழக்கேஉள்ள எலமனூர் என்னும் பகுதிக்கு நேர்வடக்கே காவிரியில் கொள்ளிடம் என்னும் பேராறு பிரிக்கப்பட்டுள்ளது. கவர்த்து இழிந்தேடும் ஆறுகளுக்கு இடையே அரங்கப்பகுதி தொடங்குகின்றது. எனவே, காவிரியில் வெள்ளம் வரும்போது அரங்க முகப்பில் மோதுதலால் அகன்ற காவிரியின் விளிம்பில் நீர் ஏற்றம் பெற்று வழிந்தோடுவதும், வெள்ளம் மிகுந்தபோது கரையில் உடைப்பு ஏற்படுவதும் இன்றும் இயல்பாகவே இருந்து வருகின்றது. பழங்காலத்திலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதை அல்லூர், கல்வெட்டுச் செய்தியால் அறிகின்றோம். எனவே உறையூர்க் கூற்றத்துள் காவிரியின் தென்கரைப் படப்பையுள் நின்ற உறையூரும் பிற ஆற்றங்கரை ஊர்களும் பலகாலங்களில் வெள்ளப் பெருக்கிற்கு உள்ளாகி அழிவு பெற்றிருக்க வேண்டுமென்பது உண்மையேயாம்.

'கோப்பெருஞ்சோழனும், அவன் குறிப்பிற்கு ஏற்ப உடனாக வடக்கிருந்த அரசச் சுற்றமும் உறையூரைச் சார்ந்த கரைப்பகுதி

யினுள், வழி கொண்டோடிய கவர்த்த நீரோடு கால்களுக்கு உட்பட்டுயர்ந்த மேட்டில் நின்ற மரத்தடியில் நடுகற்களாக நின்றனர் என்ற புறநானூற்றுச் செய்திக்குரித்தான பகுதியும் இப்படப்பைப் பகுதியேயாம்'[23]. இப்பகுதிக்குரிய எல்லை இன்றுள்ள உறையூர்க்கு மேற்கே நான்கு கல் தொலைவிலுள்ளதும் பழைய உறையூர்க்கு மேற்கு எல்லையாக நின்றதுமான மேக்குடி என்னும் சிற்றூரிலிருந்து கிழக்கே தொடரும் தென்கரைப் படுகைப் பகுதியேயாகும். இன்று இப்பகுதி வண்டல்மண் படிந்திட்ட திட்டுகளாகவும், 'ஆற்று நீர்' பெருகி வழிந்தோடும் சதுப்பு நிலங்களாகவும், திருத்தப்பட்ட நன்செய் புன்செய் நிலங்களாகவும் காட்சியளிக்கின்றன.

பகையால் அழிவு

கி.பி. 13 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூன்றாம் இராசராச சோழன் சோழநாட்டை அரசாண்டனன். ஆற்றலில் குறைந்த நிலையில் ஆட்சி செலுத்திய இவ்வரசனை, அப்பொழுது பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்த மாறவர்மன் சுந்தர பாண்டியன் வென்று சோழநாட்டை அடிமைப் படுத்த விரும்பினான்.

கி. பி. 1219ல் சோழநாட்டின் மீது படையெடுத்தான். சோழர் படை எதிர்த்தாயினும் வலி குன்றிய நிலையில் பின்வாங்கின. முதல் வெற்றி பாண்டியனுக்கு உறையூரிலேயே கிட்டியது. வெற்றி வெறியும் பழிவாங்கும் கொடுமையும் ஒன்றான நிலையில் நின்ற பாண்டியனின் ஆணையால் உறந்தைப் பெருநகர் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் ஆடரங்குகளும் அரசுக்குரிய சின்னங்களும் இடிக்கப்பட்டன. நீர் நிலைகள் அழிக்கப்பட்டன.

இதனால் உறந்தை கொளுத்தப்பட்டு, நீர் நிலைகள் அழிக்கப்பட்டு, உயர்ந்த கட்டிடங்கள் இடிக்கப்பட்டு தரைமட்டமான நிலையில், கழுதைகொண்டு உழுது, கவடி என்னும் பூண்டினை விதைத்தான் சுந்தரபாண்டியன் என்றால் அவனுக்கிருந்த பகைமையும் பழிவாங்கும் திட்டமும் இத்துணை அளவுடையதென்று சொல்லற்கியலாதன்றோ! எனவே ஆற்றழிவால் குறுகிநின்ற உறையூர், கி. பி. 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பகைவர் படையெடுப்பினால் நிலையழிந்து போயிற்று என்றே கொள்ளத்தகும்.[24]

கி. பி. 1310ல் பாண்டிய நாட்டுப்பேராட்சிக்கு, சடையவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் ஆகிய இருவரும் போட்டியிட்டனர். வீரபாண்டியனை ஒழிக்கக்கருதிய சுந்தரபாண்டியன் வடநாட்டில் இருந்த முகம்மதிய அரசன் அல்லாவுதீன்

கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர் என்னும் வீரனுடைய தலைமையில் பல்லாயிரக்கணக்கான கொடிய முகம்மதிய குதிரை வீரர்கள் தென்னகத்தின் மீது படையெடுத்தனர். அப்பொழுது எதிர்கொண்டு ஏற்ற நிலையில் சுந்தரபாண்டியனும் வந்தான். அவர்கள் பாண்டிநாடுநோக்கி வகுத்துக்கொண்ட படைப்பிரிவில் ஒன்று சிதம்பரத்தை கொள்ளையடித்தபின்னர் திருவரங்கத்தை முற்றுகையிட்டிருக்கின்றது.

ஒருவாறு அரங்கத்தை அழிவு செய்த பின்னர், மதுரையை நோக்கிய முகம்மதிய படைக்கு, அடுத்து வழியிலுள்ள உறையூர், அக்கொடியவரின் விளையாட்டுகளாக நிகழ்ந்த ஊர்களை அழித்தல், தீயிடல், பயிர்களை அழித்தல் கோயில்களையும், சிற்பங்களையும் சிதைத்தல். எதிர்த்தாரையும் எதிர்ப்பட்டாரையும் கொல்லுதல், பெண்களைக் கற்பழித்தல் ஆகிய செயல்களுள் ஒரு சில கொடுமை கட்காவது இலக்காமல் இருப்பதற்கு இயலாது.

கி பி. 1310 ல் உறையூரின் எஞ்சிய செல்வமும் பறிபோக மக்கள் யாவரும் பஞ்சையராகி, நிலைத்து வாழ அஞ்சி, கொஞ்சங் கொஞ்சமாக ஊரைவிட்டுக் கிழக்கே சிராப்பள்ளிக் குன்றைச்சார்ந்து குடியேற்றம் பெற்றும், பிறநாடு நகரங்களை நாடிக்குடி பெயர்ந்தும் சென்றிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது இவ்வாறு அரச, வளங்களோடு சிறந்திருந்த உறையூர் அழிந்துபோக, சிதைந்தநிலையில் இருந்த பழங்கோயில்களுடன், இடம் பெயர வியலாத ஏழை மக்கள் சிலருடன் பெயரளவில் ஒரு கிராமமாக உறையூர் பிற்காலத்தில் இருந்திருக்கின்றது. பின்னர் நாயக்கர் ஆட்சியிலும், ஆர்க்காடு நவாபுகளின் தேவைகளாலும், வெள்ளையரின் நல்லிடத் திட்டங்களினாலும், வளர்ச்சி பெற்றுப் பெருநகரமாக இன்று விளங்குகின்றது.

அடிக்குறிப்புகள்

1. சிலம்பு
2. மேலன
3. புறம் 212 : 8
4. பெ.பு
5. புறம் 39 : 8
6. மேலன 58 : 9
7. மேலன 352 : 10
8. மேலன 395 : 19
9. அகம் 4 : 14

ஓம்
தமிழே துணை !

தமிழ்த்தாய் திருப்பள்ளி எழுச்சி

(புலியூர்க் கேசிகன்)

*"தமிழே இனமாய் நாடாய் நடத்தலால்
தமிழே தமிழர்க் குயிர்..."*

ஆதிமொழி யானதமிழ் அனையே ! இவ் வையம்
அரும்பியநாள் அரும்பியநல் அறிவான ஒளியே !
ஓதுமொழி யாவினும்உள் உயிர்ப்பாகி நின்றே
உதிக்குமொழி யாவினுக்கும் தாயான முதலே !
தீதுமொழி சொல்லாதே சிந்தைதெளி வாக்கிச்
சிறப்புறவே மாந்தர் தமைச் சீராக்கும் தெளிவே !
நாதவொலி நயக்கடலே ! நல்லமுதக் குடமே !
நல்லுறக்கம் நீத்தினிதே நடனமிட வருவாய் ! (1)

சங்கமெனும் அரங்கதிலே தழைத்தெழுந்த கொடியே !
சத்தான புலவர்மனம் தனிலாடும் நடமே!
பொங்குமன எழுச்சியெலாம் புகலவரும் பொன்னே !

(முன் பக்கத் தொடர்ச்சி)

10. மேலன 73 : 5
11. சிலம்பு புகார் 8 : 3 - 4
12. மேலண 1 : 16
13. மேலன மதுரை 20 : 56
14. அகம் 4 : 14
15. மேலன 237
16. புறம் 219
17. S. I. I. Vol. XXII No. 6.
18. S. I. I. Vol. VIII No. 644
19. அகம் 4 : 14-15
20. மேலன
21. சம்பந்தர் தேவாரம். திருச்சி பாடல் 3.
22. S. I. I. Vol. VII ins, No. 688
23. புறம் 220, 221
24. பி. சோ. ச. F. N. பாள் 434 – 35.

பொருளான பொருளாகிப் பொலிவுமிகும் பொற்பே!
தங்குமொழி இலக்கணத்தில் தனக்குநிகர் தானாய்த்
தனித்தன்மை தழைத்தென்றும் தானோங்கும் தருவே!
எங்குமுள தமிழரினத் திதயத்தின் எழிலே!
ஈடில்லாக் குலவிளக்கே! ஈண்டெழுந்தே வருவாய்! (2)

மறந்தேனும் தமிழ்மறவா மனச்செவ்வி யோர்கள்
மனக்கயத்தே மலர்ந்தொளிரும் மணமுள பொன்மலரே!
அறிந்தோரின் அகப்பொழிலில் அளைந்தாடி இன்பம்
அரும்பிடவே அளித்துவக்கும் அன்புமலர்க் கொம்பே!
நறுந்தேனும், நயஞ்சால நல்லிசையாய் நாட்டின்
நாடகமாய் இலக்கியமாய் நயமளிக்கும் நலனே!
வருந்தாதே தமிழ்நாட்டார் வளமையெலாம் பெறவே
வளர்துயில்நீத் தெழுந்தேநீ வாழ்த்திடவே வருவாய்! (3)

ஒருமொழியாய்க் காலமெனும் வரைகடந்த வனப்பே!
ஒப்பிலவாம் எண்தொகையும் பதின்பாட்டும் பெற்றாய்!
வருமொழியார் வாய்மயக்கில் வஞ்சத்தில் வீழா
வலிமையுடன் வளமைபல வாரியமை வடிவே!
பெருமொழியாம் பலவுலகிற் பேச்சற்றே போகப்
பெருமைமிகு இளமையுடன் பிறங்கிடுமெம் தாயே!
திருமொழியாய்த் தென்னவரின் திருவமுதாய்த் திகழும்
தீந்தமிழே! யாம்வாழ நீ எழுந்தே வருவாய் (4)

கண்பாடும் காதலர்தம் களிமலரும் நெஞ்சிற்
கனிந்துகனிந் தூற்றெடுக்கும் கன்னல்நறுஞ் சாறே!
பண்பாடும் பாடல்களிற் பாநலமே பெருக்கிப்
பயின்றொலிக்கும் பண்ணாகிப் படர்ந்துவருப் பாவாய்!
பண்பாடும் பயில்மரபும் பசுமையொடே செழிக்கப்
பைந்தமிழர் உளக்கோயில் பற்றியொளிர் பரமே!
மண்பாடும் மாபுகழே யாம்வாரிக் கொள்ள
மனங்கனிந்துன் துயில்மறந்தே மலர்ச்சியுடன் வருவாய்! (5)

ஒக்கலுடன் ஊரவரும் உடனினத்தார் தாமும்
உறவாடி கலந்திடவே உரையாகும் வடிவே!
தக்கமனந் தானடையத் தழைத்தெழுந்தே பொங்கித்
தண்பொதியச் செந்தேனாய்த் தான்பெருகும் தகையே!
தெக்கணரின் குலக்கொம்பே செழுந்தமிழே எங்கும்
தேடரிய தீம்புனலே திகட்டா வான் அமுதே!
இக்கணமுன் துயிலெழுந்தே எவ்வுலகும் போற்ற
எழிலோடே இசையோடே யாம்வாழ வருவாய்! (6)

வள்ளுவனைத் தந்துபுகழ் வாரிமகிழ் கொண்டாய் !
வளமான சங்கநிதி நினக்கெனவே பெற்றாய் !
உள்ளுதொறும் உயிரினிக்கும் வாசகத்தேன் கோவை
ஒருமூலன் மந்திரமும் உவப்புடனே கண்டாய் !
தெள்ளுமணி மேகலைநற் சிலம்பு சிந்தாமணியும்
தேவாரம் பிரபந்தம் சேக்கிழார் சொல்லும்
கள்ளுநிகர் கம்பன்கவி வில்லிபா ரதமும்
கண்டநறும் கனித்தமிழே கண்விழித்தே வருவாய் ! (7)

சக்தியுளமொழியெனவிச் சகங்காண மெத்தச்
சந்தம்புகல் அருணகிரி பாரதிவாக் கானாய் !
முக்திவளம் முகிழ்த்திடவே முன்னிற்பாய் என்ன
மொழிதாயு மானார்பட் டினத்தார்வாக் கானாய் !
சித்திபல தந்தருளும் சக்தியெனக் காட்டிச்
சித்தர்களின் சொல்லாகிச் சித்தத்தே சேர்ந்தாய் !
எத்திறமும் சேர்ந்தமென இயல்பவளே ! எங்கள்
இதயத்தாய் ! இன்துயில் நீத்தெழுந்தேநீ வருவாய் ! (8)

பிச்சையெனப் பிறமொழிச்சொல் கேட்டலையா வளமும்
பெருமிதத்தால் தனித்தியங்கும் பெற்றிமிகு சீரும்
விச்சையென உலகுரைக்கும் விரிந்தகலை யாவும்
விழிப்போடே தமிழாக்கி வீறுபெறும் வலியும்
கொச்சைமனக் குழப்பர்செயும் குறும்படக்கிச் செட்ட
கொடுமதியர் வாயடங்கக் கொழுமைகொளும் சால்பும்
இச்சைஎன இனிதெழுந்தே இயக்கிவளம் காண
எம்முயிரே ! எந்தமிழே ! நீ எழுந்தே வருவாய்! (9)

சொந்தமொழி மறந்தபினே வாழ்வதுவீண் என்னும்
சொல்லெங்கும் முழங்கிடவெம் தூய்தமிழே வருவாய்
வந்தமொழி வாழுமொழி எனப்பேசும் வஞ்சர்
வாயடங்கக் கொதித்தெழுந்தே வன்மையுடன் வருவாய் !
பந்தமொழி பாசமொழி பயிலுமொழி என்றே
பைந்தமிழர் நாடெங்கும் படர்ந்தெழுந்தே வருவாய் !
வெந்தவுளம் தண்ணெனவெம் விழிமலர்கள் விழித்தே
வீறுடனே யாமெழநீ விரைந்தெழுந்தே வருவாய் ! (10)

பேசுமொரு பேச்சனைத்தும் தமிழாலே பேசும்
பெட்புடையார் தமிழரெனப் பேருலகம் போற்றத்
தேசுதரும் தமிழ்ச் செல்வம் சிந்தைதனக் கென்றே
தேசத்தார் பற்பலரும் தேடியிங்கே சேரக்

கல்வெட்டியல் அறிஞர்கள்.

புலவர். பொன். முனியப்பன் எம்.ஏ

1.0. முகிழ்ப்புரை.

1.1. தமிழ் நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகளில் பல கற்பொறிப்புகளாகப் பதியப்பட்டுள்ளன. இக்கற் பொறிப்புகளையே கல்வெட்டுகள் என்கிறோம். நடுகல் நடும் மரபில் தொடங்கிய இக்கற் பொறிப்புகள் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளாக மலர்ந்துள்ள உண்மையைக் காண்கிறோம். ஏறத்தாழ, தமிழ் நாட்டில் தமிழில் மட்டும் ஓரிலக்கம் கல்வெட்டுகள் உள்ளன எனக் கூறியுள்ளனர் அறிஞர்கள். இவற்றில் செம்பாதி கூட செப்பமுற அச்சில் பதிப்பிக்கப் படவில்லை என்பது இதுவரை உள்ள நிலையாய் உள்ளது. எனினும், இந்நிலை மாறி ஏற்றம் காணுவதற்கான சூழல் மலர்ந்துள்ளமை யாவர்க்கும் மகிழ்வூட்டும்.

2.0. கல்வெட்டும் அறிஞர்களும்

2.1 நூற்றாண்டு தோறும் மாறுபட்டு வந்துள்ள எழுத்து வடிவங்களைக் கண்டுபிடித்து பொருள் கூறும் அரிய பணியைப் பெரிய பணியாய்க் கொண்டு வரலாற்றில் நிலையான இடம் பெற்ற

(முன் பக்கத் தொடர்ச்சி)

காசு தரும் எனமயங்கிக் கண்டமொழி தாவிக்
கடன்மறந்தே வாழ்ந்தவரும் கனித்தமிழே நாட
வீசுமொரு தென்றலென விரைந்தெழுந்தே நீயும்
வெல்தமிழே எம்முயிரே விருப்புடன் நீ வருவாய் ! (11)

பயன்

அனைதமிழ் உறக்கம் நீத்தே
அன்புடன் வருதல் வேட்டுப்
புனைதமிழ்ப் பாடல் பத்தும்
புகல்பவர் உளத்தில் தோன்றும்
நினைவெலாம் தமிழே யாகும்
நிகரிலா வாழ்வும் வாய்க்கும்
அனைதமிழ் அமுதச் செந்தேன்
அருந்தினார் அமரர் ஒப்பார் !

கல்வெட்டு வல்லுநர்கள் சிலர். இவ்வரும் பணியைத் தொடங்கி யவர்களும், நன்முறையில் வழிகாட்டி வரலாற்றிற்கு வளம் கூட்டியவர்களும் பெரும்பாலும் மேலை நாட்டினரே.

2.2. நம் முன்னோரின் வன்மையையும், தன்மையையும் அவர்கள் செய்துள்ள நன்மையையும் உண்மையாய் உணர்த்தும் கல்வெட்டுகளைப் படித்தறிந்து நூலாய்ப் பதிப்பித்து நம்மையும் படிக்க வைத்தவர்களை நினைத்தும், மகிழ்ந்தும். அவர்களைப் போற்றுதல் அறிவு பெற்றோர் அனைவரும் ஆற்றத்தக்க கடமை யாகும். அவ்வகையில் நம் நாட்டுக் கல்வெட்டுகளைக் கற்றுணர்ந்து காட்டும் அறிஞர்களை ஓரளவு காட்டும் முறையில் இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. தொடக்க காலத்தில் இப்பணியைச் செய் தோர் அனைவரும் கல்வெட்டு ஆய்வைத் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டு அயராது உழைத்தமையால்தான் கல்வெட்டு அறிஞர் களாய்த் திகழ முடிந்துள்ளது. தமிழுக்கும், தமிழக வரலாற்றிற்கும், தமிழ் நாட்டிற்கும் வளமார்ந்த பணியாற்றிய அவ்வல்லுநர்களை இனிக் காணலாம்.

3. 0. உல்ஷ் துரைமகனார்

3. 1. 0 செர்மானிய நாட்டில் பிறந்த செம்மல். இவருடைய முழுமையான பெயர். ''இயூஜன் ஜூலியஸ் தியோடர் உல்ஷ்'' என்பதாகும். இவர் டிரஸ்டன் மாநகரத்தில் 1857 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29 ஆம் நாள் பிறந்தார். இவர் டிரஸ்டர் மாநகரக் கல்லூரியில் பயின்று, பின்பு 1874ஆம் ஆண்டு லிப்சியாபல்கலைக் கழகத்தில் சேர்ந்து கற்றார். சேர்ந்த நான்கு ஆண்டுகளில் கீழ்த் திசை மொழித்தத்துவங்களைக் கற்றுத்தேர்ந்தார். அக்காலத்தில் லிப்சியா நகரிலிருந்த தலைசிறந்த அறிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். 1879 ஆம் ஆண்டு, இவர் 'வசந்தராஜாவின் சாகுணா' என்பதைப்பற்றிக் கட்டுரை வரைந்து தத்துவ அறிஞர் பட்டம் பெற்றார்.

3 1.1 முதன்முதலாக இவர் வியன்னாப் பல்கலைக் கழகத்தில் வடமொழி உதவிப்பேராசிரியராகப் பதவிஏற்றார். அப்போது அப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பூலர் என்னும் வடமொழிப் பேராசிரியருடன் அறிவார்ந்த முறையில் தொடர்பும் நட்பும் கொண்டிருந்ததால் உல்ஷ் துரைமுகனார்க்கு உயரிய நற்பெயர் உண்டாயிற்று

3 1.2. பின்னர், இவர் 1884 - இல் இந்தியாவிற்கு வந்தார். சிலபழமையான கையெழுத்துப் படிகளையும், கல்வெட்டுகளையும்

ஆராய்ந்தார். அதன் பயனாய் 1886-ஆம் ஆண்டில் சென்னை மாநில அரசின் கல்வெட்டு ஆய்வாளராய் நியமிக்கப்பட்டு, 1903-ஆம் ஆண்டு வரை அப்பதவியில் இருந்து அரும்பணியாற்றினார். இக்காலத்தில் இவர், தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் மூன்றையும், வரலாற்று அறிஞர்களுக்கு வற்றாக்களஞ்சிய மாய் விளங்கும் 'ஆண்டு அறிக்கைகளையும்" வெளியிட்டுள்ளார். 'இந்தியக் கல்வெட்டு' என்னும் மூன்றாம் தொகுதி முதல் ஒன்பதாம் தொகுதியில் ஒரு பகுதிக்கும் இவர் பதிப்பாசிரியராக இருந்து ஆற்றிய பணிகள் என்றும் எண்ணிப் போற்றத்தக்க ஏற்றமுடையனவாகும். 1906-இல் தார் என்னுமிடத்தில் கரும்பாறையின் மேல் பொறிக்கப்பட்டிருந்த 'பாரிசாதமஞ்சரி' என்னும் கல்வெட்டு இலக்கியத்தை அச்சிட்டு வெளியிட்டார். 1925–ஆம் ஆண்டில் 'அசோகரின் கல்வெட்டுகள்' என்னும் உயர்ந்த பதிப்பினை வெளியிட்டார்.

3.1.3. ஒப்பில்லா உல்ஷ் துரைமகனார் கல்வெட்டுகளைத் தவிர இலக்கியங்கள், காவியங்கள், நாடகங்கள், நியாயம், பிரகிருதம் முதலானவற்றையும் ஆர்வத்தோடு அறிந்தார், ஆராய்ந்தார், அரிய நூல்களாகப் படைத்தார். 1907–ல் பட்டர் என்பவரின் 'தர்க்க சங்கிரகம்' என்பதையும், பின்னர் இலாகாட்சி பாஸ்கரருடைய தர்க்க காமுதி; விசுவநாத தர்க்க பஞ்சானருடைய பாசாபரிச் சேதா ஆகியவற்றையும் செர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். காளிதாசருடைய மேகதூதத்தை வல்லப தேவருடைய விரிவுரையுடன் 1911-இல் வெளியிட்டார். பிரகிருதத்தில் அவருக்கு இருந்த அறிவு 1909-இல் அவர் வெளியிட்ட 'பிரகிருதரூபாவதாரம் என்னும் நூலால் புலனாயிற்று. இவ்வண்ணம் பலதுறை அறிவுடன் கல்வெட்டில் கணிசமான அளவுக்குப் பணியாற்றிய இவர் 1927 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16–ஆம் நாள் 'கால்' என்னும் நகரத்தில் தன் பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

4.0. ஜேம்ஸ் பிரின்செப்

ஆங்கிலேயராகிய இவர் நாணயச்சாலையில் பணிபுரிந்தார். ஆசியக் கழகத்தின் (Asiatic Society of Bengal) செயலாளராகவும் இருந்தார். இவர், வழக்கில் இல்லாத பிராமி எழுத்தை ஆராய்ந்து கற்று அசோகரின் கல்வெட்டுகளைப் படித்துப் பொருள் கூறிய பெருமைக்கு உரியவர் அசோகருடைய கல்வெட்டுகள் முதன்முதல் 1750–இல் கண்டு பிடிக்கப்பட்டது. ஆயின் 1837–இல் சிறப்புடைய ஜேம்ஸ் பிரின்செப் அவர்களே முதன்முதலில் அதனைப் படித்து பொருள் கூறினார். பிராமி எழுத்துக்களைப் படிக்கும் திறவு

கோலைக் கண்டுபிடித்த அருந்திறலார் இவரே. பிராமி எழுத்துகள் பொறித்துள்ள அசோகர் காலக் காசுகளையும் இவர் நன்கு ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

5. 0 அலெக்சாண்டர் கன்னிங்காம்.

5 1. பிராமி எழுத்தின் திறவுகோலைக் கண்டறிந்த பெருமைக் குரிய பிரின்செப் அவர்களுடன் இருந்து பணியாற்றிய உயர் அறிஞர். பல்வேறு கோடுகளையுடைய பழங்காலக் கல்வெட்டு களை எளிதில் படிக்க வழியறிந்து அதில் வெற்றி பெற்றவர்.

6. 0 பேராசிரியர் துப்ரேய்ல் துரைமகனார்.

6. 1. அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்து தமிழ் நாட்டின் பண்டைச் சிறப்பினை அறியச் செய்தவர். அரிக்கமேட்டைத் தென்னிந்தியத் 'தட்சசீலம்' எனக்கூறி அதற்கான சான்றுகளால் நிறுவியவர். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து கிடைத் துள்ள பல்லவ கிரந்த எழுத்துகளின் பல வகைகளையும் எடுத்துக் காட்டி விளக்கியவர் இவர்.

7. 0. டாக்டர் பியூலர்.

7. 1. தென்னக எழுத்து முறையில், அஃதாவது தமிழ் முறை யில் எகரம் கீழ் நோக்கிய வளைவாகக் காணப்படுவதை முதலில் எடுத்துக் காட்டியவர். பனையோலையில் எழுதும் பழக்கத்தினை யும், அதன் இயல்புகளையும் பற்றி மிகச் சிறப்பாக ஆய்வு செய்தவர்.

8.0. ஸ்டெயின்.

8.1 வெளியில் புலப்படும் கல்வெட்டுகளை மட்டுமன்றி மண்ணுள் புதைந்திருந்த பல ஆவணங்களையும் கண்டுபிடித்து அதனைப் படித்து அறிவித்தவர். பெரும்பாலும் இவர் தன் ஆய்வு களை மத்திய ஆசியாவிலும், திபெத்திலும் நிகழ்த்தியுள்ளார்.

9 0. பிளீட்.

9.1. கல்வெட்டு எழுத்துகளில் சிலவற்றைப் 'பறவை எழுத்துகள்' எனக் குறிப்பிட்டு அதற்குரிய காரணங்களையும் எடுத்துரைத்தவர். மகாநாமனின் புத்த கயைக் கல்வெட்டு எழுத்துக்கும் சமன்காட்டுச் செப்பேட்டு எழுத்துக்கும் இடைப்பட்டது. இரண்டாம் கீர்த்திவர்மனின் பட்டக்கல் தூண் கல்வெட்டுஎழுத்துகள் என்பதை ஆராய்ந்து காட்டிய அருந்திறலார் இவர்.

10.0. டாக்டர். பர்னல்.

10.1 யாதவர், காகதீயர் ஆகியோரின் எழுத்துகளின்றும் பிறந்த நந்தி நாகரி எழுத்துகளை பனையோலைகளில் எழுதிய பழக்கத்தால் அவ்வெழுத்துக்களில் ஒழுங்கற்ற தன்மை உண்டாயிற்று என்பதைப் படிப்படியாய் எடுத்துக் காட்டியவர்.

11.0. பி. எல். ரைஸ்.

11.1. கருநாடக மாநிலத்தில் சித்தபுரத்தை அடுத்த பிரம்ம கிரியில் உள்ள அசோகனின் பிராமிக் கல்வெட்டைக் கண்டுபிடித்துப், படித்து, பொருள் கூறியவர். தாளகுண்டாக் கல்வெட்டை 1894-ஆம் ஆண்டு வெளியிட்டவர். பண்டையக் கதம்பர் கல்வெட்டுகளில் உள்ள பெட்டித்தலை எழுத்துகளை எடுத்துக்காட்டி விளக்கமளித்த வர்.

12.0 கர்னல் காலின்

12.1. தமிழ்நாட்டில் ஆங்காங்கே உள்ள கல்வெட்டுக்களைப் படியெடுக்கும் பணியைச்செய்தவர். அத்தோடு நில்லாமல் படி யெடுத்த கல்வெட்டுக்களைப் பதிப்பிப்பதற்கு உற்ற காரணமாய் இருந்து உதவியவர்.

13.0 எலியர்

13.1. பாண்டியர் காசுகளைப் பற்றியும், கல்வெட்டு எழுத்து களைப் பற்றியும் ஆராய்ந்தவர். பாண்டியர் காசுகளில் நாகரி எழுத்துகளை உடையவை காலத்தால் முற்பட்டவை எனக் கூறி யுள்ளவர்.

14.0 டாக்டர் கீல்கார்ன்

14.1 திருக்கோவில்களில் உள்ள கல்வெட்டுகளையெல்லாம் படியெடுக்கப் பணியாற்றியவர். அவற்றை தக்கவண்ணம் பதிப் பித்து வெளியிட உறுதுணையாயிருந்தவர்.

1.50 எம் காட்டநவ்

15.1 பிரெஞ்சுநாட்டு அறிஞர். புதுச்சேரி மாநிலத்திலுள்ள கல்வெட்டுகளை ஆராய்ந்தவர். மேலும் புதுச்சேரி மாநிலத்தில் கிடைத்த சிலவகை மணிகளை ஆராய்ந்து அவற்றின் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு எனத்தெரிவித்தவர்.

16.0 இராபர்ட் சிவெல்.

16.1. அரசில் பெரும்பதவியில் இருந்தாலும், கல்வெட்டு களின் மீது மாறாக்காதலுடையவர் இவருடைய ஏற்றமிக்க உதவி யால்—உறுதுணையால் கல்வெட்டுகள் சில அச்சில் பதிப்பிக்கப் பட்டு பலரும் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றன. கல்வெட்டுப் பதிப்பில் பாராட்டத்தக்க பணியாற்றிய பாங்கினர் இவர்.

17.0. கெய்த்.

17.1. கல்வெட்டுகளை நன்கு ஆராய்ந்த கல்வியாளர், தமிழ் நாட்டு வரலாற்றுக்குக் கல்வெட்டின் அருந்துணையை எடுத்துரைத்தவர். கல்வெட்டுகள் மன்னர்களின் இயல்புகளைவிட மக்களின் செயல்முறைகளை விளக்குவன – அதிலும் தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் இவ்வகையில் முதலிடம் பெறுவன என்பதை எடுத்துக் காட்டியவர்

18.0. ஜெய்ஸ்வால்.

18.1. கல்வெட்டுகளை அறிவதால் உண்டாகும் பயன்களை யும், அதன் பொதுவான அமைப்புகளையும் எடுத்துக் காட்டியவர். கல்வெட்டுகளை அச்சில் கொணரும் பணியிலும் ஈடுபட்டவர்.

19.0. து. அ. கோபிநாதராவ்

19.1. கல்வெட்டு ஆய்வில் வல்லவராயும், வழிகாட்டியாயும் ஒப்பில்லாது விளங்கிய அறிஞர் உல்ஷ்துரை மகனாரின் உடனிருந்து கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டு அரும் பணியாற்றியவர். திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டைக்கு அருகில் உள்ள ஆய்குடியில் ஆண்ட ஆய்மன்னர்களின் செப்பேட்டை முதன் முதலில் ஆராய்ந்து வரலாற்றுலகிற்கு வழங்கியவர். இவர் 1902 – ஆம் ஆண்டு முதல் திருவனந்தபுரம் சமத்தானத்தில் கல்வெட்டு ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருந்து திருவாங்கூர் சாசனத் தொடர் என்னும் தொகுதிகளை வெளியிட்டவர். இவர் எழுதிய பண்டைத்தமிழ் எழுத்துகள் பற்றிய ஆராய்ச்சி யாவராலும் போற்றத்தக்க சிறப்புடையதாகும்.

20.0. வி. வெங்கையா.

20.1. தமிழ்நாட்டில் இருக்கும் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வில் வல்லவராயும், வழிகாட்டியாயும் ஒப்பில்லாது விளங்கிய அறிஞர் உல்ஷ்துரை மகனாரின் உடனிருந்து கல்வெட்டு ஆய்வில் ஈடுபட்டு

அரும் பணியாற்றியவர். பண்டைக்கால நீர்பாசன வசதிகள் பற்றி கல்வெட்டுகளில் இருந்து அரிய செய்திகளை வழங்கியவர்.

21.0. டாக்டர் அய்யப்பன்.

21.1. சென்னை அருங்காட்சியகப் பொறுப்பாளராக இருந்தவர். பேராசிரியர். துப்ரேயல் துரைமகனாருடன் அரிக்க மேட்டில் ஆறு இடங்களைத் தோண்டி ஆராய்ந்தவர். கல்வெட்டு களை ஆராந்து அருங்கடமையாற்றியவர்.

22.0. கே. வி. சுப்பிரமணிய அய்யர்

22.1 தமிழ்நாட்டில் உள்ள குகைகளில் அமைந்துள்ள பிராமிக் கல்வெட்டுகளை முதன் முதலாகப் படித்துக் கூறியவர். பிராமி எழுத்துக்கள் தமிழ் எழுத்துகளே எனக் காட்டி விளக்கியவர்.

23.0. இராவ் சாகிப் எச் கிருட்டிண சாத்திரி

23.1. தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் அமைந்துள்ள பிராமி கல்வெட்டுகளை முதன் முதலாகப் படித்து அதன் பொருள் யாதெனக் கூறியவர்

24.0. தி. வி. மகாலிங்கம்

24.1. இவரும் தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் அமைந்துள்ள பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்து, அவற்றைப் படித்துப் பொருள் கூறியவர்.

25.0. தி நா. சுப்பிரமணியம்

25.1. கல்வெட்டுகளைப் பதிப்பித்தவர். கல்வெட்டுகளை ஆராய்ந்து அகரவரிசை உருவாக்கியவர். கல்வெட்டுகளில் உள்ள அருமையான தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்தவர். வெளிநாட்டில் உள்ள தமிழ் கல்வெட்டுகளைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து அரிய செய்திகளை வழங்கியவர். தமிழ்க் கல்வெட்டுப் பதிப்பிலும், ஆய்விலும் அரிய பல பணிகளைச் செய்தவர்.

26.0. சீனிவாச அய்யங்கார்

26.1. தமிழக வரலாறு குறித்த அரிய நூல் படைத்தவர். கல் வெட்டுகளை ஆய்ந்து, மாறுபாடில்லாக் கருத்துகளை, தமிழ் வரலாற்றுயர்வை யாவரும் அறியச் செய்தவர்,

27.0. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்.

27.1. கொங்கு நாட்டு வரலாறு குறித்து அருமையான நூல் உருவாக்கியவர். கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளையும், பிற கல் வெட்டுகளையும் நன்கு ஆராய்ந்து வரலாறு படைத்தவர்.

28.0. மு. இராகவையங்கார்

28.1 தமிழ்இலக்கண இலக்கியங்களில் நிறைந்த புலமைஉடை யவராக விளங்கியதோடு கல்வெட்டுஆய்விலும் வல்லுநராய்விளங்கி னார். வரலாற்றிற்கும், இலக்கண, இலக்கியங்களுக்கும் கல்வெட்டு களைச் சான்றுகாட்டி அரியகட்டுரைகளும் பிறவும் படைத்தவர்.

29.0. தி. வி. சதாசிவ பண்டாரத்தார்.

29.1. தமிழ் நாட்டின் வரலாற்று நூல்களை ஆக்கியவர். இலக்கண, இலக்கியப் புலமையும் உடையவர். கல்வெட்டுகளின் அடிப்படையில் இவர் உருவாக்கிய வரலாற்று நூல்களே எல்லோருக்கும் அடிப்படை நூல்களாக விளங்குகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. கல்வெட்டால் அறியப் பெரும் அரிய செய்தி களையெல்லாம் தனித்தனி நூல்களாக ஆக்கி வழங்கியுள்ளார். இலக்கிய இலக்கணங்களின் காலத்தைக் கல்வெட்டுகளால் திட்ட மாக வரையறுத்துக் காட்டியுள்ளார்.

30.0. சுந்தரேச வாண்டையார்

30.1 அரிய கல்வெட்டுகளை நூலாக்கி வெளியிட்டவர். அக் கல்வெட்டுகளில் உள்ள கருத்துகளுக்கெல்லாம் விரிவான விளக்க மும் தந்து, கற்போர்க்கெல்லாம் கல்வெட்டைக் கற்கும் ஆர்வத்தை ஊட்டியவர்.

31.0. புலவர். வ தங்கையா நாடார்.

31.1 சிறந்த கல்வெட்டுகளைக் கொண்ட தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள் என்னும் நூலை வெளியிட்டவர். கல்வெட்டில் உள்ள ஒவ்வொரு பெயர்க்கும் விரிவான, தெளிவான விளக்க மளித்தவர். கல்வெட்டு அறிவை வளர்க்கக் கடமையாற்றியவர்.

32.0 டாக்டர் மா இராசமாணிக்கனார்

32.1 சென்னைப்பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலை வராகப் பணியாற்றியவர். கல்வெட்டுக்களை ஆராய்ந்து சிறந்த வரலாற்று நூல்களைப் படைத்துள்ளவர். கல்வெட்டில் உள்ள

சிறப்பு மிக்க செய்திகளையெல்லாம் இனியகட்டுரைகளாகவும், அரிய நூல்களாகவும் வெளியிட்டுள்ளவர். ஆய்வுக்குரிய இடங்களுக்கெல்லாம் நேரில் சென்று கல்வெட்டுகளையும், பிறவற்றையும், ஆழ்ந்து ஆராய்ந்து அரும்பணியாற்றியவர்.

33 0. சா. கணேசன்

33.1 காலமெல்லாம் கம்பன் அடிப்பொடியாய் வாழ்ந்து கனி தமிழ் பரப்பிய இவர் கல்வெட்டு ஆய்வில் மிகுந்த ஈடுபாடு உடையவர். இவருடைய கல்வெட்டு அறிவிற்கும் ஆய்விற்கும் என்றும் குன்றாச்சான்றாய் நின்றிலங்குவது, இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது, கலைக்காட்சிக்குழுவின் தலைவராக இருந்து இவர் வெளியிட்டுள்ள 'கையேடு'. இதைக்காண்போர் இவரின் கல்வெட்டு அறிவின் மேம்பாட்டை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்வர்.

34 0. மயிலை. சீனி. வேங்கடசாமி

34.1 ஆராய்ச்சிப் பேரறிஞர் எனக்கற்றவர்களால் போற்றப் பெறும் பெற்றிமிக்கவர். தம் 80 ஆண்டு வாழ்க்கையில் ஏறத்தாழ 60 ஆண்டுகளை ஆராய்ச்சிப் பணிகளுக்கே செலவிட்டு அரிய நூல்களைப்படைத்தவர். தமிழக வரலாற்றுச் சிக்கல்கள் பலவற்றை எளிதாகத் துவங்கவைத்தவர். கடுமையான உழைப்பும், உண்மை காணும் வேட்கையும், அவற்றைக்குழப்பாமல், மழுப்பாமல் வெளியிடும் திறனும் இவர்க்குரிய சிறப்புத்தன்மைகளாகும். தமிழ்மொழி இலக்கியம், இலக்கணம், வரலாறு, பண்பாடு, வான்முறை முதலிய வற்றில் ஆழ்ந்த அறிவும் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களில் தோய்ந்தஅறிவும் பெற்றவர். இவ்வடிப்படைத் திறன்களுடன்இவர் ஆக்கியுள்ள 'சங்ககாலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள்' என்னும் நூல் கல்வெட்டு உலகிற்குக்கிடைத்த களஞ்சியம் எனல் மிகையாகாது.

35 0. முடிப்புரை

35.I. வழக்கில் இல்லாமல் வழிகாட்டுவோரும் இல்லாமல், கல்லில் அழியாத நிலை பெற்ற கல்வெட்டுகளைக் கற்றுப் பொருள் கூறிய கடினமான பணியைத் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டு வாழ்ந்து சிறந்த வல்லுநர்களின் வளமார்ந்த உழைப்பின் உயர் பாங்கினை ஓரளவு கண்டோம், இனி, வாழும் அறிஞர்களில் பலர் கல்வெட்டு ஆய்வினைத் தம் கடமையாகக் கொண்டு, ஆர்வத்தோடும் அரு முயற்சியோடும் செய்து வருகின்றனர். இவர்களின் பெரும் உழைப்பால் விளையும் - விளையப் போகும் வியன்பயன்கள்

பற்பல. இன்று வாழும் அத்தகைய ஏற்ற மிக்காரில் சிலரை யாவது இங்கு நினைவு கூராது போயின் இக்கட்டுரை குறை உடையதாகி விடும். அக்குறைவகற்ற, கற்றுவல்ல அக் கல்வெட்டு அறிஞர்களின் பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

35.20. தமிழ்ப் பலகலைக் கழகத்தில் தற்போது கல்வெட்டுப் புலத்தின் தலைவராக விளங்கும் பேராசிரியர். டாக்டர். கூ. ரா. சீனிவாசன், மற்றும் பேராசிரியர். புலவர். செ. இராசு ஆகியோரின் பணி ஏற்ற மிக்கது. இந்தியத் தொல் பொருள் ஆய்வுத்துறைத் தலைமை கல்வெட்டெழுத்தியல் தலைவர் பேராசிரியர். டாக்டர். கே. ஜி. கிருஷ்ணன் மற்றும் பேராசிரியர், டாக்டர். கே. வி. ரமேஷ், பேராசிரியர், டாக்டர். எம்.டி. சம்பத் ஆகியோரின் உழைப்பு உயர்ந்தது. சென்னைப் பலகலைக்கழகத் தொல்லியல் துறைத் தலைவர் பேராசிரியர், டாக்டர் கே.வி. இராமன் மற்றும் கல்வெட்டாய்வாளர் திரு ஏ. ஏகாம்பரநாதன் ஆகியோரின் வெளியீடுகள் வியன் திறனுடையவை.

35.21. தமிழ் நாட்டுக் குகைக் கல்வெட்டுகளாகிய பிராமிக் கல்வெட்டுகளையும், சிந்துவெளி முத்திரை எழுத்துகளையும், ஆழ்ந்து ஆராய்ந்து அரிய கட்டுரைகளை வழங்கி வருபவர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள். 'தினமலர்' (நாளிதழ்) ஆசிரியராகத் திகழந்து வட்டெழுத்தை – குறிப்பாகச் சேரநாட்டு வட்டெழுத்தை நுணுகி ஆராய்ந்து அருமையான நூல் பதிப்பித்துள்ளவர் திரு.இரா.கிருஷ்ணசாமி அவர்கள். இராமன் & இராமன் என்னும் பேருந்துப் போக்குவரத்து நிறுவன உரிமையாளரான திரு. சேதுராமன் அவர்கள் வானியல் அடிப்படையில் கல்வெட்டுகளில் காட்டியுள்ள காலங்களையும் பிறவற்றையும் மிகத் துள்ளியமாகக் கணக்கிட்டு அரிய பெரும் ஆய்வு நூல்களைப் படைத்துள்ளார்—படைத்துவருகிறார்.

35.2.2 தமிழ்நாட்டு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குநர் திரு. இரா. நாகசாமி, இந்நாள் இயக்குநர் திரு. நடன. காசிநாதன் மற்றும் இத்துறையில் பணியாற்றும் பூங்குன்றன் முதலான பதிவாளர்கள் யாவரும் ஆக்கமிக்க கல்வெட்டுப் பணிகளைத் தொடர்ந்து ஆக்கி வருகின்றார்கள்.

35.2.3. தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளை ஆய்பவர் யாராயினும் அவர் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், மரபு, பண்பாடு ஆகியவற்றில் புலமையுடையராகத் திகழ்தல் இன்றியமையாதது. இவற்றில் தேர்ந்த புலவர் பெருமக்களும் கல்வெட்டுத் துறையில்

நவில்தொறும் நூல்நயம்

அமுத. இளவழகன், பி.லிட்., பி.எட்.

"திருக்குறள் இலக்கிய நூலாகவும் விளங்குகிறது. இதற்குச் சான்று : அந்நூலில் வரும் உவமைகளும் கற்பனைகளுமே" என்பது தவத்திரு அழகரடிகளாரின் முடிவாகும். *

அத்தகு உவமைகளும் கற்பனைகளும் எல்லா இடங்களிலும் பரவலாக உண்டு. எனினும் இன்பப்பாலில்தான் அத்தகு இலக்கியக் கூறுகள் முழுமை பெற்று மிளிர்கின்றன. திருக்குறளின் இலக்கியப் பாங்கு மேன்மை உறுவது இன்பத்துப்பாலில் தான்.

அந்த இன்பத்துப் பாலில் கற்பனைக் கவின்மிகு ஒரு பாடல்,

"காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண் ஒவ்வேம் என்று"

இதற்குப் பரிமேலழகர் குவளைப் பூக்கள் தாமும் காண்டல் தொழிலை உடையவாயின் மாண்ட இழையினை உடையாள் கண்களை யாம் ஒவ்வேம் என்று கருதி அந்நாணினால் இறைஞ்சி நிலத்தை நோக்கும் என்று விளக்கம் தருகிறார். இவ்வளவுதானா வள்ளுவரின் உள்ள உணர்ச்சி உணர்த்தியது? அம்மம்மா! ஏராளம்! ஏராளம்! இதோ சில நயமான சிந்தனைகள்.

குவளைக்குக் காணும் சக்தி இல்லை. அப்படியே சக்தி வந்து-காணுமானால் கவிழ்ந்து நீரையே பார்க்கும். ஆனாலும் வெட்க மிகுதியால் நீரை ஊடுருவி நிலத்துக்குள்ளேயும் நோக்கும். எனவே தான் நீர்நோக்கும் என்னாது நிலம் நோக்கும் என்றார்.

---

* மயிலம் திருப்படி வெள்ளிவிழா நினைவு மலர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு இனிய பல பணிகளை ஆற்றி வருகின்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் புலவர். புது. போ. வேங்கடராமன், புலவர். வெ. இரா. துரைசாமி, புலவர். வி. இராமமூர்த்தி(வியாரெம்)புலவர். குப்புசாமி (புதுச்சேரி) ஆகியோர். இத்துறையில் வல்ல பெரும் பாலோரை இங்கு எடுத்துக் காட்டிய மகிழ்ச்சியுடன் இப்போதைக்கு இக்கட்டுரையினை நிறைவு செய்கின்றேன்.

அப்படி ஊடுருவி நிலத்தைப் பார்ப்பது எதற்காக? ஏ! நிலமே! நீ என்ன பயன் உற்றாய்? அந்தப் பெண் மகளைப் பெற்ற நிலம் என்னை வெல்லும் கண்களையும் அவளுக்குத் தந்துள்ளதே? என்னைப் பெற்ற நீ என்ன பயன் செய்தாய்? உனக்கு வெட்க மில்லையா? என்று கேட்பதாகக் கவிழ்ந்து நிலன் நோக்குகிறது.

கவிழ்ந்து நிலன் நோக்கும் என்றால் மேல்நோக்கிய குவளை மாணிழை கண்களைக் கண்டு நாணம் கொள்கிறது. அந்தமாணிழை யைப்—பயந்த நிலத்தின் பக்கமாகக் கவிழ்கிறது. ஏன்? நாமும் அந்த நிலத்தில் பிறந்து மாணிழை கண் ஒத்து வாழ முடியாதா என்ற ஏக்கத்தில் கவிழ்ந்து நோக்குகிறது.

ஏக்கத்தோடு மட்டுமல்ல—நாம் இந்த நீரிலேயே இருந்தால் இப்படியேதான் இருக்க வேண்டும். சாகும்வரையிலும் பலரும் நம்மை ஒப்பிட்டு — இகழ்ந்து பேசக்கேட்க வேண்டியே வரும். இகழ்ச்சிமொழிகளைக்கேட்டு இனியும் வாழ்வதா? இப்போதே தற் கொலை செய்துகொள்வோம் என்பதாக நிலத்தை நோக்கிச் சாய்கிறது. நீரைவிட்டு நீங்கினால் சாகலாம் என்றமுடிவில் நிலம் நோக்கிக் கவிழ்ந்து சாய்கிறது.

நிலத்திலே தற்கொலை செய்து கொள்வதில் இன்னுமோர் பொருத்தம் இருக்கிறது.

மாணிழை பிறந்தது இந்த நிலம்; இந்த நிலத்தில் பிறந்து—சிறந்த கண்களைப் பெற்று என்னை அவமதித்தவள் மாணிழை. என்னைப் பழித்த அவளது பிறப்பிடத்திலேயே நான் தற்கொலை செய்துகொள்கிறேன். எனக்குப் பழி செய்தவளுக்குப் பழி வரட்டும். பாவம்! குவளை இந்தப்பெண்ணோடு ஒப்பாகாது செத்துவிட்டது' என்ற பேச்சினால் மாணிழை பழிபெறட்டும். என்ற நோக்கில் குவளை நிலம் நோக்கிக் கவிழ்கிறது.

இன்னும் கூட, ''மாணிழை காணின், குவளை, கவிழ்ந்து நிலன் நோக்கும்'' என்று இயைபுபடுத்திக் காணலாம். அழகு மங்கை தன் கண்களுக்கு ஒப்பில்லாத குவளையைப் பார்க்கவில்லை. பார்த்தால் அது ஒப்பின்மை கருதி வருந்துமோ என்று பாராமலேயே செல்கிறாள். அவள் பார்த்துவிட்டால்—இணையாக மாட்டாத உடன் குவளை கவிழ்ந்து விடவேண்டியதுதான் எனப்பொருள் அமையும்.

இத்தகு கற்பனைக் கருத்துக்களுக்கு எல்லாம் திருவள்ளுவரின் ஒன்றே முக்கால் அடியில் இடமிருக்கிறது அல்லவா? அதுதானே தெய்வவாக்கின் திறம்!

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம் ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலப்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.

7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு. எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	—	100—00